# முத்தான தொண்டர்



கவிஞர் வி. கந்தவனம்

# முத்தான தொண்டர்

ஞானசுரபி, ஆத்மஜோதி
நா. முத்தையா அவர்களின்
வாழ்வும் பணியும்

கவிஞர் வி. கந்தவனம்

இந்து சமயப் பேரவை
ஒன்ராறியோ, கனடா

முத்தான தொண்டர்
கவிஞர் வி. கந்தவனம்

முதற்பதிப்பு : ஆவணி, 1995
எழுத்தமைப்பு : அன்பரசி இராஜலிங்கம்
அட்டைப்படம் : கருணா
அச்சகம் : சங்கர் அச்சகம்
வெளியீடு : இந்து சமயப் பேரவை, ஒன்ராறியோ, கனடா

Title : Muthana Thondar
Author: V. Kandavanam

First Published : August 1995
Typesetting : Anparasi Rajalingam
Cover Design : Karuna
Printed by : Shankar Print
Published by : Hindu Religious Society
Ontario, Canada

## பதிப்புரை

'முத்தான தொண்டர்' என்னும் இந்நூல் ஞானசுரபி முத்தையா சுவாமிகளின் வாழ்வையும் தொண்டையும் விவரிக்கின்றது. இதுபோன்ற ஒரு நூல் எப்பொழுதோ வந்திருக்க வேண்டியது. இப்பணி கனடா இந்து சமயப் பேரவையின் போஷகர்களின் ஒருவரான கவிஞர் வி. கந்தவனம் அவர்களின் முயற்சியால் இப்பொழுது நிறைவேறியிருப்பது தெய்வ சித்தம் என்றே கூறுதல் வேண்டும்.

கவிஞர் அவர்கள் சுவாமிகளின் நண்பர். அவரது வாழ்வையும் சமய, சமூகப் பணிகளையும் நன்கு அறிந்தவர். மிகுந்த பக்தி சிரத்தையோடு தனது பணியை நிறைவு செய்திருக்கின்றார். சுவாமிகளின் வாழ்க்கை வரலாற்றைப் படிக்கத் தூண்டும் தொடர்கதைபோல நகர்த்திச் செல்வது தனிச்சிறப்பு. சைவசித்தாந்தக் கருத்துக்களை ஆங்காங்கு விளக்கி இருப்பது மற்றொரு சிறப்பு.

நூலின் தரம் சுவாமிகளின் திருத்தொண்டுகளைப்போல உயர்ந்து காணப்படுகின்றது. அத்துடன் அழகான தமிழ் நடையாலும் சிறப்புற்று விளங்குகின்றது. சுவாமிகளின் பணிகளுக்குக் கவிஞரின் தமிழ் அணிசெய்கின்றது.

தகுந்த சமய நூல்களை வெளியிடுவது கனடா இந்து சமயப் பேரவையின் நோக்கங்களுள் ஒன்றாகும். ஞானசுரபி அவர்கள் எழுதிய 'தரிசனம்' என்னும் நூல் பேரவையின் முதல் வெளியீடு. கவிஞர் அவர்கள் ஆக்கிய 'முத்தான தொண்டர்' என்னும் நூலை அடுத்த வெளியீடாகத் தருவதிற் பேரவை பெருமை அடைகின்றது.

எழுத்தமைப்பைச் செய்து தந்த செல்வி அன்பரசி இராஜலிங்கம் அவர்களுக்கும் அழகுற அச்சிட்டு உதவிய சங்கர் அச்சகத்தாருக்கும் சுவாமிகளின் ஆசி கிடைப்பதாக!

பெரியவர்களின் வரலாறு எமக்கெல்லாம் வழி

காட்டியாக அமையுந் தன்மையது. கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக சமய, சமூகப் பணிகளுக்கே தம்மை அர்ப்பணித்துப் பெருஞ் சேவையாற்றிவரும் முத்தான தொண்டராம் முத்தையா சுவாமிகளின் வாழ்க்கை வரலாற்றில் நாம் படித்து முன்னேற வேண்டிய பாடங்கள் எத்தனையோ உள்ளன. அன்பர்கள் படித்துப் பயனடைவார்களாக!

இந்து சமயப் பேரவை — ச. திருநடராசா
ஒன்ராறியோ, கனடா — செயலாளர்

## மதிப்புரை

கவிஞர் திலகம், மதிப்பிற்குரிய திரு. கந்தவனம் அவர்களின் உள்ளத் தடாகத்தில் மலர்ந்த இந்நூல் வரவழைத்துத் தரும் திருக்காட்சியைக் காண ஆயிரம் கண்கள் வேண்டும் போலத் தோன்றுகிறது.

அடியாருக்கு அடியாராகப் பணிபல புரிந்து தெய்வத்துள் தெய்வமாய் விளங்கும் அருட்திரு ஆத்மஜோதி முத்தையா அவர்கள் பற்றி நாடறிந்த கவிஞர் திலகம் எழுதும் இந்நூலுக்கு அறிமுகம் வெறும் சம்பிரதாயமே.

அருட்திரு ஆத்மஜோதி ஐயாவை முழுமையாக அறிந்தவர்கள் விரல்விட்டு எண்ணக் கூடியவர்கள் என்பதை இந்நூல் வாசித்த பின்புதான் புலனாகிறது. ஐயா அவர்களது பணிகள் பல. ஆசானாய்ப் பணிபுரிந்து மாணாக்கர் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட விதத்தை இந்நூலாசிரியர் பின்வருமாறு கூறுகிறார்:

"பல ஆசிரியர், மாணவர் மத்தியில் ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் நிலைநாட்டக் கடுஞ் சொற்களையும் பிரம்பையுமே பாவித்து வந்த அந்தக் காலத்தில், முத்தையா அவர்கள் புன்முறுவலையும் அரவணைப்பையும் ஆயுதங்களாகப் பயன்படுத்தினார். ஆசிரியர்களைக் கண்டால் மாணவர்கள் பயந்து ஒடுங்குகின்ற காலத்தில் அன்பாலும் பண்பாலும் ஆசிரிய மாணவ நல்லுறவை வளர்த்துக் கற்பித்தல் முறையில் சல சலப்பற்ற புரட்சி ஒன்றை ஏற்படுத்திய பெருமை முத்தையா அவர்களைச் சாரும்".

ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோறு பதமாக அமைகிறது.

ஆத்மஜோதி ஐயா அவர்கள் ஆசானாய் இருந்து

அதிபரானார். அதன்பின்பும் அன்பால் ஆண்டார். பிந்திவந்த ஆசானையும், முந்திவந்தும் பணிபுரியத்தவறிய ஆசானையும் நெறிப்படுத்திய விதத்தைப் பார்க்கும் போதும் ஆத்மஜோதிக்கு நிகர் அவரே என்பது தெட்டத் தெளிவாகி விடுகுறது.

தன்னை வருத்தி, பிறரை மகிழ்விக்கும் உத்தம பண்பு இந்நூலில் விளக்கமாகத் தரப்பட்டிருக்கிறது. யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் எனப்படும் போது யான் பெறாத இன்பத்தை இவ்வையகம் பெறட்டும், நான் பெறும் துன்பத்தை இவ்வையகம் பெறாதிருக்கட்டும் என்ற உத்தம கோட்பாடு மகான் ஆத்மஜோதி ஐயா அவர்களின் பணிகள் ஒவ்வொன்றிலும் இழையோடி இருப்பதை ஆசிரியர் தேன்பாலூட்டித் தருகிறார்.

அறிஞர்க் காசானாய் வாழும் ஐயா அவர்கள் சமூகப்பணிக்குத் தம்மை அர்ப்பணித்திருப்பது காலத்தோடு ஒத்தது. மக்கள் சேவையே மகேசன் சேவை எனக் கருதி மலையகத்தில் நொந்துபட்ட மக்களுக்கு அறிவுப் பசியைக் கிளப்பி அறிவமுது ஊட்டினார். வயிற்றுப்பசியால் வாடியவருக்கு உண்டி கொடுத்து உவகையூட்டினார். அவரது கைதடிச் சிறுவர் இல்லம் அனாதை என்ற வார்த்தையை அவரது அகராதியில் இன்று எடுத்துவிட்டது. இன்றையை போராட்டச் சூழலில் பெற்றோரை இழந்த பாலருக்குத் தந்தையாய், தாயாய், ஆசானாய், தோழனாய் இருந்து பணிகள் புரிந்து வரும் செயற்பாட்டினை வாசிக்கும்போது எமது உள்ளங்கள் பூரிப்படைகின்றன.

ஆத்மஜோதி ஐயா அவர்கள் கனடா வந்திருந்த போது எமது வீட்டில் பசனை ஒன்றை நடத்தினார். அப்பசனை முடிந்த பின்பு கைதடிச் சிறார் இல்லத்தில் நடை பெற்ற ஒரு சம்பவத்தை குறிப்பிட்டார். பல பிள்ளைகள் ஒரு நாள் கூடி "ஐயா எங்களுக்குப் படம் பார்க்க ஆசையாக இருக்கிறது. உங்கள் உதவியை நாடுகிறோம்" என்றார்கள். மலைபோல் இருந்த வேலைகளை ஒருபுறம் தள்ளி வைத்துவிட்டு உடனடியாக அவர் படம் பார்க்க ஒழுங்கு செய்தார். ஒன்றிற்குப் பதில் மூன்று படங்கள் பார்த்துவிட்டு அப்பிள்ளைகள் உறங்கப் போகும் போது அவர்கள் உள்ளத்துவகையைத் தீர்த்த மாகப் பருகித் திருப்தி கொண்ட உத்தமர் உறவு எமக்கு கிடைத்த பாக்கியமே.

ஐயாவின் பாதயாத்திரை பற்றி அவர்கள் வார்த்தைகளாலே நூலாசிரியர் தெளிவாகத் தந்துள்ளார்.

"பாத யாத்திரையிற் சாதி வேறுபாடு, ஏற்றத்தாழ்வுகள் எதுவும் இன்றி எல்லோருமே பங்குபற்றலாம். இறைவன் முன்னிலையில் யாவரும் சமம். ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற உயர்ந்த பரந்த தத்துவத்தை நடைமுறைப்படுத்துவதே பாதயாத்திரை. மேலும் ஓரிடத்தில் இருந்து கொண்டு செய்யும் கூட்டுப் பிரார்த்தனை இரண்டொரு மணித்தியாலங்களில் முடிந்து விடக்கூடியது. நடந்து கொண்டு செய்யும் கூட்டுப் பிரார்த்தனை கோயிலின் தூரத்தைப் பொறுத்துப் பலமணி நேரங்களில் அல்லது நாட்கணக்கில் மேற்கொள்வது. கூட்டுப் பிரார்த்தனையில் ஓர் இடத்தில் அல்லது ஓர் ஊரில் உள்ளவர்களே பங்கு பற்ற முடியும். பாதயாத்திரையிற் பல ஊரார்கள் பங்குபற்றலாம். கோயில் தரிசனங்களுக்கும் இது வழி வகுக்கின்றது. யாத்திரிகர் மத்தியில் சமய உணர்வு, இறைபக்தி என்பவற்றுடன் இடர்ப்பாடுகளைப் பொறுத்துக் கொள்ளும் இயல்பினையும், ஒருவருக்கொருவர் உதவும் பண்பினையும் நல்லுறவையும், ஒற்றுமையையும் வளர்க்கப் பாதயாத்திரை வழிபாட்டு முறை உதவுகிறது."

ஐயாவின் எழுத்தாற்றல், தமிழ்ப் புலமை என்பனவற்றிற்கு ஆத்மஜோதி ஏடு பெருமளவு உறுதுணையாக அமைந்திருக்கிறது. ஐயாவின் நாவன்மைக்கு அவரை நாவுக்கரசர் என்றாலும் மிகையாகாது. சொல்வர் உழவர் உள்ளங்களை உழுது அறநெறிப்பாத்திகட்டி, சிவநெறிப் பயிர் வளர்த்து, பக்தியெனும் நீர் பாய்ச்சி, திருமறைப் பசளை தூவி ஆசைகளைப் பிடுங்கி அல்லல் அறுத்து ஆனந்தம் தரும் அன்பராய் ஊருக்கு உழைத்து வரும் ஆத்மஜோதி ஐயாவின் புகழைப் பாடிக் கொண்டே போகலாம்.

இரத்தினச் சுருக்கமாய் அவர் வாழ்க்கைப் பணிகளைக் காலத்தோடு கருத்துச் செறிந்த இந்நூலை ஆக்கித் தந்த கவிஞர் திலகத்தின் தமிழ்ப்பணி தமிழருக்கு, குறிப்பாக தமிழீழத் தமிழுக்கு, உதவும் வகையில் அமைய இந்துசமயப் பேரவை உறுதுணையாக நிற்கும் என்பது திண்ணம்.

சாமி அப்பாத்துரை

## முன்னுரை

இறைபணிக்கும் சமூக நலப் பணிக்கும் தம்மை அர்ப்பணித்து வாழும் அயராத் தொண்டர் ஞானசுரபியும் ஆத்மஜோதியுமாகிய நா. முத்தையா அவர்கள். கனடாவில் 1994 ஆம் ஆண்டு யூலை மாதம் நடைபெற்ற நான்காவது அனைத்துலகச் சைவ சித்தாந்த மாநாட்டிற் கலந்து கொள்ள அவர் வருகை தந்தமைக்கும் இந்நூல் ஆக்கத்துக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது.

அவர்களது ஆத்மீக சேவைநலன் பாராட்டு விழா மலருக்கு ஒரு கட்டுரை எழுதித் தரும்படி இந்து சமயப் பேரவை அன்பர்கள் கேட்டிருந்தனர். அந்தக் கட்டுரையை எழுதி முடித்த பொழுது, முத்தையா அவர்கள் ஒரு சிறு கட்டுரைக்குள் அடங்கக் கூடியவரல்லர் என்று அக்கட்டுரை எனக்குச் சொல்லிற்று. இந்த உண்மை வெளிப்பாட்டின் விளைவே இந்த நூல்.

பேட்டிகள் மூலம் சில தகவல்களைத் திரட்டலாம் என்ற நம்பிக்கையில் முத்தையா அவர்களையும் என்னையும் சந்திக்க வைக்கும் பணியில் ஈடுபட்டார் அன்பர் சிவ. மகாலிங்கம் அவர்கள். இருவருக்கும் இருந்த நேர நெருக்கடி காரணமாக இரு குறுகிய சந்திப்புகளுக்குமேல் தொடரமுடியவில்லை. திரட்டிய தகவல்களைக் கொண்டு எனக்குத் தெரிந்த அளவில் அவரது சமய வாழ்வைச் சரித்திரமாக்க முயன்றிருக்கின்றேன்.

மீண்டும் அதே குரல்! முத்தையா அவர்களை ஒரு சிறு நூலுக்குள் அடக்கிவிட முடியாது! தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே!

ஏதோ எமது பெரியார்களின் வரலாறுகள் பதியப்படல் வேண்டும், அவை எமது வருங்காலத்துச் சந்ததியினருக்கு வழிகாட்டிகளாக அமைதல் வேண்டும் என்ற பெரு விருப்பினாலே, ஞானசுரபி அவர்களது வாழ்க்கை வரலாற்றுக்குப் பிள்ளையார் சுழி போட்டதில் ஒரு நிறைவு. இந்தப் பிள்ளையார் சுழிக்கு அடியேனைத் தெரிந்தெடுத்த

தெய்வ சித்தம் இருந்தவாறு.

சமய சித்தம் சான்றவரும் கனடா இந்து சமயப் பேரவைப் போஷகரில் ஒருவருமாகிய நண்பர் சாமி அப்பாத்துரை அவர்கள் நூலுக்கு மதிப்புரை தந்திருக்கின்றார்கள். அவருக்கும் நூலை வெளியிட்டிருக்கும் இந்து சமயப் பேரவைக்கும் எமது வாழ்த்துக்கள் உரித்தாகுக.

வி. கந்தவனம்

# பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| பதிப்புரை | 3 |
| மதிப்புரை | 5 |
| முன்னுரை | 8 |
| 1. பால முத்து | 11 |
| 2. கல்வி முத்து | 16 |
| 3. ஆசிரிய முத்து | 20 |
| 4. சமூகத் தொண்டர் | 25 |
| 5. பாத யாத்திரிகர் | 30 |
| 6. ஆத்மஜோதி | 35 |
| 7. அரிய எழுத்தாளர் | 40 |
| 8. பழுத்த பேச்சாளர் | 44 |
| 9. அவையத்து அறிஞர் | 48 |
| 10. இந்தோனேசியத் தீபம் | 51 |
| 11. காலத்துக்கேற்ற சுவாமி | 55 |
| 12. அந்தர் யோகர் | 59 |
| 13. மகான்களைக் கண்ட மகான் | 63 |
| 14. அற்புத பாகர் | 66 |
| 15. அனாதைகளின் அப்பன் | 71 |
| 16. ஞானசுரபி | 77 |
| 17. பல்லோரும் ஏத்தும் தொண்டர் | 82 |
| 18. வாழ்த்து | 86 |


# 1

# பால முத்து

உலகெலாம் உணர்ந்து வழிபட்டுய்ய வல்ல சிவதலங்கள் நிறைந்ததும் கடற் கரைகள் தோறும் இப்பிகள் வாயிலே முத்துக்கள் இலங்குவதும் ஈழத்துப் பூதந்தேவனார் முதல், இன்றுவரை அந்தமில் இன்பத்துச் செந்தமிழ் மொழியினை வளர்த்து வருவது மாகிய ஈழமண்டலத்தின் வடபால் அமைந்திருக்கும் யாழ்ப்பாண நாடு பொன்முடிப்புக் கட்டிப் புலவர்களை ஆதரித்த புகழை யுடையது; மன்னர்கள் வீற்றிருந்து மாநிலம் தழைக்க ஆண்ட மாட்சிமை கொண்டது.

இத்துணைப் பெருமை சான்ற யாழ்ப்பாணக் குடாநாட்டின் மத்தியில் உள்ள செம்மண் வலயத்தில் அமைந்துள்ள ஏழாலை இன்பத் தமிழும் இயற்கை அழகும் குலவிக் கொழிக்கும் இனிய இடம். ஏழு ஆலயங்களைக் கொண்டு விளங்குவதால் ஏழாலை என்னும் அரும்பெயரைத் தாங்கியிருக்கும் அற்புதமான கிராமம். ஆறில்லாது போனாலும் அழகு பாழாகாத ஊர். அறிஞர்களால் ஊறிய புகழாறு பாய்ந்து பொலிவு செய்யும் பொற்பதி. சி.வை. தாமோதரம்பிள்ளை (கி.பி.1832 – 1901) முதலாகத் தமிழுக்கு உழைத்த அறிஞர்கள் பலரை உலகுக்கு அளித்த அன்னை. கணேசையர் அவர்களைத் தந்த புன்னாலைக்கட்டுவன், காசிவாசி செந்திநாதையர் அவர்களை ஈன்றெடுத்த குப்பிளான், சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களைப் பெற்றெடுத்த மல்லாகம் ஆகிய பக்கத்துத் தோழியர்களோடு உறவாடி வாழும் உத்தம நங்கை.

இவ்வித சிறப்பு மிக்க ஏழாலைப் பதியின் கிழக்கிலே சங்கரி என்ற திருநாமத்தையுடைய பெரியார் ஒருவர் முன்னொரு காலத்தில் வாழ்ந்து வந்தார். இவர் பெருங் கமக்காரர். தனது வீட்டில் இருந்த பலா மரம் காய்க்கும் பருவம் வந்தும் காயாதிருக்கக் கண்டு, 'காய்த்தால் முதற் பழம் உனக்கே' என்று கதிர்காமத்தானுக்கு நேர்ந்து விட்டார் சங்கரியர்.



பெரியார் நாகமணியும் பொன்னுப்பிள்ளை அம்மையாரும்

காதல் மிக்கார் கவலைகள் போக்கும் கந்தப் பெருமான் கருணைத் திறத்தால் பூக்காத பலாவும் பூத்துக் காய்த்தது. சங்கரியரும் மனைவியாரும் கதிர்காமத்தானின் தனிப் பெரும் கருணையை நினைந்து களிபேருவகை அடைந்தனர். பலாக் காய் முற்றிப் பழுத்து ஒரு திருக்கார்த்திகைத் தினத்தன்று விழுந்து கிடந்தது. தோட்டத்தில் வேலைகளை முடித்துக் கொண்டு வீட்டுக்குத் திரும்பிய சங்கரியருக்குப் பலாப்பழம் விழுந்துவிட்டதை மனைவியார் தெரிவித்தார்.

'நான் குளிக்கப் போகிறேன், நீ மாவிளக்குக்கு வேண்டியவற்றைத் தாயார் செய்' என்று தமது துணைவியாருக்குக் கூறி, கதிர்காமம் செல்ல ஆயத்தம் செய்தார் சங்கரியர். குளித்துக் கும்பிட்டபின், கடகம் ஒன்றிலே பலாப் பழத்தையும் மாவிளக்குச் சாமான்களையும் வைத்தார். இதற்கிடையில், அடுத்த வேலிக்காரருக்குச் செய்தி எட்டி, சங்கரியரை வழியனுப்ப நாலைந்து பேர் கூடிவிட்டனர். எல்லாரும் அரோகராச் சொல்லச் சங்கரியர் கடகத்தைத் தூக்கித் தலையில் வைத்துத் தனது கதிர்காம யாத்திரையைத் தொடங்கினார்.

சங்கரியர் அடுத்த நாளே கதிர்காமத்தால் திரும்பி வந்து விட்டார். அவர் கதிர்காமம் செல்லவில்லை, எங்கேயோ கிட்டடியில் உள்ள கோயில் ஒன்றுக்கே போய்த் திரும்பி இருக்கின்றார் என்ற எண்ணத்துடன் அக்கம் பக்கத்தார் வந்து கூடினர். ஆனால், சங்கரியர் கதிர்காமத்துத் திருநீற்றையும் மாணிக்க கங்கைத் தீர்த்தத்தையும் அங்கு வந்தவர்களுக்கு வழங்கியபோது அனைவரும் அதிசயமுற்றனர்.

இந்த அதிசய பக்தர் பரம்பரையில் வந்தவரே சின்னத்தம்பி என்ற தரும சீலர். பெரிய கமக்காரர்; நான்கு குடிற் பாற்பண்ணைக் காரர். ஒரு குடிலில் நான்கு மாடுகளைக் கட்டி அவிழ்க்கலாம். இவர் பதினாறு மாடுகளை வைத்திருந்தார். பாலைக் காசுக்கு விற்பது பாவம் என்று கருதி இலவசமாகவே எல்லாருக்கும் கொடுத்துதவிய தருமசீலர் இவர். கணவன் எவ்வழி அவ்வழி மனைவியென வாழ்ந்து இல்லறம் நடத்தியவர் பார்வதி அம்மையார்.

சின்னத்தம்பிப் பெரியாருக்கும் பார்வதி அம்மையாருக்கும் பிறந்த பிள்ளைகளில் ஒருவர் நாகமணி அவர்கள். இவரின் தெய்வ மனைவி பொன்னுப்பிள்ளை அம்மையார். இருவரும் செய்த இணையில் தவத்தால் சைவம் தழைக்கவும் அறங்கள் விளைக்கவும்

அன்புள்ளம் பழுக்கவும் அனாதைகள் பிழைக்கவும் 1918ஆம் ஆண்டு வைகாசி மாதம் 25ஆம் திகதி விசாக நட்சத்திரம் விளங்கிய காலை ஆறு மணியளவில் ஞான வைரவக் குழந்தையேயன்ன முத்தொன்று வந்து பிறந்ததைக் கண்டு பெற்றவர் ஆர்த்தனர்; உற்றவர் உவந்தனர்ர்; மற்றவர் மகிழ்ந்தனர்; ஞானிகள் போற்றினர்; தேவர்கள் வாழ்த்தினர்.

குழந்தைக்கு முத்தையா என்று பெயர் சூட்டிப் பெற்றார் குதூகலித்தனர். குல தெய்வமாகிய இலந்தைகட்டி ஞான வைரவப் பெருமானுக்குப் பொங்கிப் படைத்தனர்.

முத்தையா! என்ன அழகான பெயர்; அற்புதமான பெயர். இது போன்ற பெயர்கள் எல்லாம் பழையன என்று சொல்லிப் புதுப்பெயர்களைத் தேடி அலைந்து தமிழ் அல்லாத பெயர்களைத் தம் பிள்ளைகளுக்கு வைக்கும் இக்காலத்துப் பெற்றார் பகுத்தறிந்து பார்க்க வேண்டிய பச்சைத் தமிழ்ப் பெயர்.

முத்தையா வளர்ந்தான். 'குறு குறு நடந்து சிறுகை நீட்டி இட்டுந் தொட்டும் கவ்வியும் துழந்தும்' பெற்றார் மகிழப் பிதற்றி வளர்ந்தான். முத்தினைப் போல விளங்க வளர்ந்தான்.

பலரின் பெயருக்கும் வாழ்க்கைக்கும் தொடர்பிருப்பதில்லை. ஞானவேல் என்ற பெயரையுடையவர் ஞானமோ வேலனைப் பற்றிய நினைவோ இல்லாமல் வாழ்க்கையை நடத்துவதைக் காணமுடியும். அதுபோலவே குலசிங்கமென்ற பெயராளர் குலத்தைக் கெடுக்கும் காரியங்களைக் கூசாமற் செய்யவுங் கூடும். தமது பெயருக்கு ஏற்பவாவது நடக்கவேண்டும் என்று பொதுவாக யாரும் சிந்திப்பதில்லை. பெயர்கள் வெறும் இடு குறிகளே என்பது பலரின் நினைவு.

ஆனால், பெற்றார்கள் ஏதாவதொரு காரணம் பற்றியே பிள்ளைகளுக்குப் பெயர்களைச் சூட்டுகின்றனர். பெயர்ப் பொருளுக்கும் வாழ்க்கைக்கும் தொடர்பு இருக்கவேண்டும் என்னும் நம்பிக்கையுடனேயே பெற்றார் பெயர்களைத் தெரிவு செய்கின்றனர். ஆனால் பிள்ளைகளோ தமது பெயர் சுட்டும் பொருளுக்கேற்ப வாழவேண்டும் என்று பெரிதும் சிந்திப்பதில்லை.

முத்தையா பெயருக்கு ஏற்ப வளர்க்கப்பட்டான். அழகான

வெள்ளைக் குழந்தையாக இருந்த காரணத்தால் வீட்டிலுள்ள எல்லாரது அன்புக்கும் பாத்திரமானான். பெற்றார் தோட்ட வேலைகளில் ஈடுபட்டிருக்கும் நேரங்களில் தமயன் கந்தையா, தமக்கைமார் செல்லமுத்து, சின்னம்மா ஆகியோரின் அரவணைப்பில் இன்பங் கண்டான். தம்பி அருமைநாயகம் பிறந்தபின் அவனுடன் கொஞ்சிக் குலாவி வளரலாயினான்.

முத்தையாவின் வளர்ப்பில் பேரனார் சின்னத்தம்பிப் பெரியார் அதிக அக்கறை காட்டினார். நீதி நியாயத்தையும் தரும சிந்தனையையும் முத்தையாவின் மனத்தில் சிலையில் எழுத்துப் போலப் பதித்தவர் இவரே. ஒருமுறை கோயிற் குத்துவிளக்குடன் விளையாடிவிட்டு எண்ணெய்க் கையுடன் சிறுவன் வீடுக்கு வந்தான். பேரனார், 'நீ கோயிலுக்குரிய எண்ணெய் கொஞ்சத்தைக் கையில் பிரட்டி வீட்டுக்குக் கொண்டுவந்துள்ளாய். தெரியாத்தனமாகவேனும் கோயிற் சொத்தை வீட்டுக்கு எடுத்துவரலாகாது. அது பாதகமான செயல்' என்று கூறினார். இப் போதனை இன்றும் முத்தையா அவர்களை வழிப்படுத்திக் கொண்டிருக்கின்றது.

முத்தையாவின் பரம்பரை தர்மம் செய்து வளர்ந்த பரம்பரை; தருமம் செய்வதே மனிதப் பிறவியின் பயன் எனத் தெளிந்த பரம்பரை. பேரனாரைப் போலவே தந்தையார் நாகமணி அவர்களும் தரும சிந்தனை உள்ளவர்; தோட்டத்து விளைவுகளை இல்லாதார்க்கு அள்ளி அள்ளிக் கொடுத்தவர். பலன் எதுவும் எதிர் பாராது கொடுத்தவர்; பிள்ளைகளையும் அவ்வழியே வளர்த்தெடுத்தவர்.

செல்வன் முத்தையா வளர்ந்தது தரும வளவில்.

# 2

# கல்வி முத்து

மாணவர் முத்தையா ஏழாலை கத்தோலிக்க பாடசாலையில் ஐந்தாம் வகுப்புவரை கல்வி கற்றார். சக கத்தோலிக்க மாணவர்கள், 'என்னடா சாம்பல் பூசிக்கொண்டு வருகிறாய்' என்று இவரைப் பகடிபண்ணுவதுண்டு. முத்தையாவுக்கு அப்பொழுது சாம்பலுக்கு அர்த்தம் தெரியவில்லை. நெற்றித் திருநீற்றையொத்த சுத்த மனத்துச் சிரிப்பையே பதிலாக அவரால் அப்பொழுது கொடுக்க முடிந்தது.

இத்தகைய பகடிகளினாற் பலர் அக்காலத்திற் சமயம் மாறிய சரித்திரங்கள் நிறையவே உள்ளன. முத்தையாவின் குடும்பம் சைவ வைராக்கியக் குடும்பம்; கொள்ளோம் பிற சமய வாழ்வு குடிகெடினும் என்றிருந்த கொள்கைக் குடும்பம்.

இவரது பெற்றார் செம்மனச் செல்வர்கள்; சிவ பக்த சீலர்கள். பசுப்பாலைக் காசுக்கு விற்றல் பாவம் எனக் கருதி இலவசமாக வேண்டியோருக்குக் கொடுத்துதவி வந்த பரம்பரையைச் சேர்ந்த தரும தயாளர். ஏழாலை கிழக்கில் இலந்தைகட்டி என்னும் திருவிடத்தில் எழுந்தருளி இருக்கும் ஞானவைரவப் பெருமான் இவர்களது குலதெய்வம்.

இவ் வாலயத்திற் பெற்றாருடன் சேர்ந்து சிறு வயதிலிருந்தே சரியைத் தொண்டு புரிவது முத்தையாவின் வழக்கமாகும். அவரது வாழ்க்கைமுறை சைவ ஆசாரங்களோடு அமைந்தது. அதனால், கத்தோலிக்க பாடசாலைக்கும் திருநீறு சந்தனம் தரித்த ஆசார சீலராகவே அவர் சென்றார். மற்றைய மாணவர்கள் பகடி பண்ணுகின்றார்களே என்று அவர் திருநீறு பூசாமற் சென்றது கிடையாது.

இப்பாடசாலையில் முத்தையா படித்துவரும் காலத்தில்,

சரவணைச் சாமி எனப் பலரும் பொதுவாக அழைக்கும் சடை வரதர் ஒரு நாள் வீட்டுக்கு வருகை தந்திருந்தார். பெற்றார் இருவரும் விழுந்து கும்பிட்டனர். சிறுவர் முத்தையாவும் விழுந்து கும்பிட்டார். சாமியார் சிறுவரின் தலையைத் தடவி, 'நீ சட்டம்பியாராய் இருப்பாயடா. உலகம் சுற்றுவாயடா. ஒரு குறையும் இல்லாது வாழ்வாயடா' என்றெல்லாம் வாழ்த்திவிட்டுச் சென்றார். இந்தச் சம்பவம் சிறுவர் முத்தையாவின் நெஞ்சில் நீங்காத ஒரு நினைவாகிவிட்டது.

ஆறாம் வகுப்பு முதல் மயிலணி சைவ வித்தியாசாலையில் படித்துவந்தார். தலைமை ஆசிரியராக அப்பொழுது திரு. செல்லத்துரை அவர்கள் பணிபுரிந்தார்கள். திருவாளர்கள் பொன்னம்பலம், விசுவநாதர், அப்புத்துரை, வெற்றிவேலு ஆகியோர் ஆசிரியர்களாக இருந்தனர்.

முறையான சமயப் படிப்பு இங்கேயே ஆரம்பமாகியது. முக்கியமாகத் திருவருட்பயன் படிப்பித்த பலாலி பொன்னம்பலம் ஆசிரியர் மூலம் சமய தத்துவங்கள் பலவற்றுக்கு விளக்கங்கள் பெற நேர்ந்தது. பொன்னம்பல உபாத்தியாயரும் முத்தையா மீது அன்பு பாராட்டி நெருங்கிப் பழகினார். தலைமை ஆசிரியர் செல்லத்துரை அவர்கள் ஓய்வு பெற்றதையடுத்துப் பொன்னம்பலம் தலைமையாசிரியர் ஆக்கப்பட்டார்.

ஒருமுறை தலைமை ஆசிரியர் பொன்னம்பலம் முத்தையாவிடம் சமைக்கத் தெரியுமாவெனக் கேட்டார். முத்தையாவின் அகராதியில் 'தெரியாது', 'இல்லை', 'முடியாது' ஆகிய சொற்கள் கிடையா. அதனால் 'ஆம்' என்றே சொல்லிவிட்டார். சமைத்தே அறியாத இளைஞர் அன்று சமைக்கப் பழகினார். சோறு கஞ்சியாக வந்தது. பொன்னம்பல உபாத்தியாயர் பார்த்துவிட்டு, 'நான் பேதி மருந்து குடிக்க வில்லையே முத்தையா' என்றார்.

இங்கு படிக்கின்ற காலத்திலேயே யோகர் சுவாமிகளால் மிகவும் மதிக்கப்பட்ட சுன்னாகம் செல்லாச்சி அம்மையாரைத் தரிசிக்கும் வாய்ப்பு முத்தையாவுக்குக் கிடைத்தது. இவரது தரிசனம் முத்தையாவின் உள்ளத்தில் சமய உணர்வை வளர்க்கத் தூண்டியது.

அடுத்த தூண்டுதல் நாவலர் வித்தியாசாலை என்று பொதுவாக அழைக்கப்படுகின்ற திருநெல்வேலி முத்துத்தம்பி சாதனா

பாடசாலையிற் கிடைத்தது. இங்கு, ஒருவருட ஆசிரிய தராதரப் பத்திரப் படிப்பை மேற்கொண்டிருந்த காலத்தில் நாவலர் பெருமானின் தமயனார் மகன் ஸ்ரீ த. கைலாசபிள்ளை அவர்களிடம் சமயம் படிக்கக்கூடியதாக இருந்தது. கைலாசபிள்ளை அவர்கள் கம்பராமாயணக் கவிநயச்சக்கரவர்த்தி வித்துவசிரோமணி பொன்னம்பலப்பிள்ளை அவர்களுக்கு மைத்துனர்; பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களுக்கு ஆசிரியர். அஃகி அகன்ற அறிவுகொள் சான்றோராகிய இவரிடம் பாடம் கேட்டவகையால் முத்தையாவின் சமய உணர்வு மேலும் வளரலாயிற்று.

ஆயினும், பரீட்சைகளில் இவர் அதிக புள்ளிகள் பெற்ற பாடங்கள் கணக்கு, பூமிசாத்திரம், சரித்திரம் என்பனவாகும். இதிலிருந்து இப் பாடங்களிலேயே முத்தையாவுக்கு அதிக நாட்டம் இருந்ததென்பது புலனாகின்றது. முக்கியமாகக் கணக்குப் பாடத்தில் இவர் ஒரு புலியாக இருந்தார். மற்றைய மாணவர்கள் இவரைச் சூழ்ந்து கணிதத்தில் தமக்குரிய ஐயங்களைக் கேட்டுத் தெளிந்து கொள்ளும் அளவுக்கு இவரது கெட்டித்தனம் மிகுந்திருந்தது.

முத்துத்தம்பி சாதனா பாடசாலையிற் கல்வி கற்ற காலத்தில் மகாதேவ சுவாமிகளை இடையிடையே சந்திக்கும் வாய்ப்புங் கிட்டியது. மகாதேவ சுவாமிகள் யாழ்ப்பாணம் கந்தர் மடத்தில் வேதாந்த மடத்தைத் தாபித்தவர். அவரைச் சந்திக்கக் கிடைத்த வாய்ப்புகள் முத்தையா அவர்களின் வேதாந்த ஞானத்தை வளர்க்க உதவின.

ஆசிரிய தராதரப் பத்திரப் பரீட்சையிற் சித்தியெய்திய முத்தையா அவர்கள் 1937ஆம் ஆண்டு திருநெல்வேலி சைவாசிரியர் பயிற்சிக் கலாசாலைக்குத் தெரிவு செய்யப்பட்டார்.

இக் கலாசாலையிற் கல்வி கற்கும் காலத்திலேயே பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் பக்குவப் பார்வை இவர்மீது விழுந்தது. பண்டிதமணியிடம் கற்றவர்கள் தமிழ் அறிவிலும் சிவஞானத்திலும் ஒழுக்க சீலத்திலும் உள்ளப் பக்குவத்திலும் மேன்மையானவர்கள் என்பது தமிழ்கூறும் நல்லுலகம் நன்கு அறிந்த உண்மையாகும்.

முத்தையா அவர்கள் ஆசிரியர் பயிற்சிக் கல்வியைச் சிறப்புற முடித்துக் கொண்டு 1939ஆம் ஆண்டு ஆசிரியராகும் தகைமையுடன்

திருநெல்வேலி சைவாசிரியர் பயிற்சிக் கலாசாலையை விட்டு வெளியேறினார். அப்பொழுது அவருக்குச் சடை வரதர் முன்பு 'நீ சட்டம்பியாராய் இருப்பாயடா' என்று வாழ்த்திய சம்பவம் கண்முன் காட்சியளித்தது.

# 3

# ஆசிரிய முத்து

முத்தையா அவர்கள் 1939ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15ஆம் திகதி நாவலப்பிட்டியிலுள்ள சென் மேரிஸ் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பதவி ஏற்றார். 1948ஆம் ஆண்டு நாவலப்பிட்டி கதிரேசன் குமார மகா வித்தியாலயத்துக்கு மாற்றம் பெற்று 1976ல் ஓய்வு பெறும்வரை அங்கேயே கடமையாற்றினார்.

இந்துசமயம், தமிழ் மொழி, தமிழ் இலக்கியம் என்பன இவர் படிப்பித்த பாடங்கள். இவருக்கு விருப்பமான கணிதம், பூமிசாத்திரம், சரித்திரம் ஆகியவற்றைப் படிப்பிக்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. விரும்பும் பாடங்களைக் கேட்டுவாங்கும் சூழ்நிலை அக்காலத்தில் அதிகம் இருக்கவில்லை. அத்தகைய சுதந்திரம் எல்லாம் அரசாங்கம் பாடசாலைகளை 1960ஆம் ஆண்டிலிருந்து பொறுப்பேற்கத் தொடங்கிய பின்னரே ஆசிரியர்களுக்குக் கிடைக்கத் தொடங்கியது. ஆயின், கற்பித்தற் சுதந்திரங்களும் தொழிற் சலுகைகளும் ஆசிரியர்களுக்குக் கிடைத்ததைத் தொடர்ந்து பாடசாலைகளிற் கல்வித் தரம் வீழ்ச்சியடையத் தொடங்கியதையும் அதனால் பாடங்களைப் பிள்ளைகளுக்குப் பிரத்தியேகமாகச் சொல்லிக் கொடுக்கும் பயிற்சிக் கூடங்கள் வளர்ந்ததையும் யாவரும் அறிவர்.

விரும்பும் பாடங்களைக் கேட்டுப் பெறும் நிலைமை இருந்திருந்தாலும்கூட முத்தையா அவர்கள் அதனைப் பயன்படுத்தியிருக்க மாட்டார்கள். அவருக்கு எல்லாப் பாடங்களும் படிப்பிக்க வரும். 'முடியாது', 'இயலாது', 'தெரியாது' என்று முத்தையா அவர்கள் யாருக்கும் சொல்வது கிடையாது. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றுக்கு அர்த்தம் கற்பிக்கும் வகையில் வாழ்ந்து காட்டிய காந்தீயவாதி கனம் காமராசரைப் போல 'ஆகட்டும்', 'பார்க்கலாம்' என்ற சொற்களால் அனைவரையும் ஆட்கொள்ளும் பக்குவத்தை இளம் வயதிலேயே முத்தையா அவர்கள் பெற்றுவிட்டார்கள்.

அந்தக் காலம் குருவே தஞ்சம் என மாணவர்கள் நம்பியிருந்த காலம். பிறரிடம் ஏதாவது சந்தேகங்கள் கேட்டாலும், 'போய் உன் உபாத்தியாயரைக் கேள்' என்னும் பதில் கிடைக்கும் காலம். மலைநாட்டுப் பகுதிகளில் அவ்வித உதவிகளைக் கேட்கக் கூடிய தகைமை வாய்ந்தவரும் அக்காலத்தில் குறைவாகவே இருந்தனர். பெற்றோருக்கும் படிப்பறிவு குறைவு. அதனால் அவர்களும் வீடுகளிற் பிள்ளைகளுக்கு உதவ முடியாத நிலை. பெரும்பாலான பெற்றோருக்குத் தமது பிள்ளைகள் படித்து முன்னுக்கு வர வேண்டும் என்கின்ற ஆர்வமும் இருக்கவில்லை. தோட்டங்களில் வேலை பார்க்கும் வயதை எட்டும்வரை பொழுதுபோக்கும் விளையாட்டாகவே பள்ளிக்கூடப் படிப்பு இருந்து வந்தது. இத்தகைய சூழ்நிலையைப் பயன்படுத்தி ஆசிரியரும் விளையாடத் தொடங்கினர். இதனால், மலைநாட்டுப் பள்ளிக்கூடங்களிற் படிப்பு முறையாக நடப்பதில்லை என்னுமோர் அபிப்பிராயம் பரவலாயிற்று.

மலைநாட்டுப் பிள்ளைகளின் கல்வியில் முழுமையான ஆர்வம் காட்டிய சில ஆசிரியர்களில் முதன்மையானவர் முத்தையா அவர்கள். மாணவர் நலனே அவரது கரிசனையாக இருந்தது. மனம் வைத்துப் படிப்பித்தார். பல ஆசிரியர், மாணவர் மத்தியில் ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் நிலைநாட்டக் கடுஞ் சொற்களையும் பிரம்பையுமே பாவித்து வந்த அந்தக் காலத்தில், முத்தையா அவர்கள் புன்முறுவலையும் அரவணைப்பையும் ஆயுதங்களாகப் பயன்படுத்தினார். ஆசிரியர்களைக் கண்டால் மாணவர்கள் பயந்து ஒடுங்குகின்ற காலத்தில் அன்பாலும் பண்பாலும் ஆசிரிய – மாணவ நல்லுறவை வளர்த்துக் கற்பித்தல் முறையில் சலசலப்பற்ற புரட்சி ஒன்றை ஏற்படுத்திய பெருமை முத்தையா அவர்களைச் சாரும். இதனால் இவரைச் சுற்றி எப்பொழுதும் மாணவர்களைக் காணக்கூடியதாக இருந்தது. மலைநாட்டுத் தமிழ் உலகில் முத்தையா என்ற சொல் எல்லோரது நாவிலும் மட்டுமன்றி மனத்திலும் இடம் பெறலாயிற்று.

மாணவரை மட்டுமல்லாது, ஆசிரிய சங்கங்களிலும் அதிக ஈடுபாடு கொண்டு ஆசிரியரையும் வழிப்படுத்தத் தொடங்கினார் முத்தையா அவர்கள். 1942 முதல் நாவலப்பிட்டி ஆசிரியர் சங்கச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். சில ஆண்டுகளின் பின் சங்கம் அவரைத் தலைவராகத் தெரிவு செய்து இளைப்பாறும் வரை அவரையே தலைவராகத் தொடர்ந்து வைத்திருந்ததிற் பெருமை கண்டது.

1945ஆம் ஆண்டில் மத்திய மாகாணத் தமிழ் ஆசிரியர் சங்கச் செயலாளர் பதவியினையும் ஏற்றார். அதனைத் தொடர்ந்து, அதன் முன்னேற்றத்துக்காகப் பலவாறு உழைத்துப் பிற்காலத்தில் அதன் தலைவராகவும் இளைப்பாறும்வரை இருந்தார்.

அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்க உப காரியதரிசியாகவும் 1950ஆம் ஆண்டு தெரிவாகினார். இதன்பின் அச் சங்கத்தின் பரீட்சைக் காரியதரிசி, உப தலைவர் போன்ற பதவிகளை வகித்து அதன் வளர்ச்சிக்கு இவர் ஆற்றிய தொண்டு அளப்பரியது.

முத்தையா அவர்கள் முதன்மை வாய்ந்தவொரு நிர்வாகியுமாவர். 1960ஆம் ஆண்டிலிருந்து 1976ஆம் ஆண்டில் ஓய்வு பெறும்வரை நாவலப்பிட்டி கதிரேசன் குமார மகா வித்தியாலயத்தின் அதிபராகவும் இவர் கடமையாற்றி யிருக்கின்றார்.

மாணவர் பிந்திவந்தாற் பொறுப்பார். ஆசிரியர் பிந்திவந்தால் ஒறுப்பார். ஒறுத்தலாவது, இயல்பான புன்முறுவலால் வரவேற்காதிருத்தல். மாணவருக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதற்கே ஆசிரியருக்குச் சம்பளம் கொடுக்கப்படுகின்றது. அந்தச் சம்பளத்தை அதற்குரிய கடமையைச் செய்து பெற்றுக்கொள்வதே உழைப்பாகும். கடமையைச் செய்யாது சம்பளத்தை எடுத்தல் களவாகும். இந்தக் களவு நடவாது பார்த்துக் கொள்வது அதிபருக்கு இருக்கவேண்டிய கடமைகளுள் ஒன்று.

முத்தையா அவர்களின் சாந்த குணத்தையும் பொறுமையையும் சில பொறுப்பற்ற ஆசிரியர் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தப் பார்த்துத் தோல்வி கண்டிருக்கின்றனர். ஓர் ஆசிரியர் பாடசாலைக்கு மிகவும் பிந்தி வருவதையே வழக்கமாகக் கொண்டிருந்தார். வரவு நேரக் கையொப்பப் புத்தகத்தில் அதிபர் கீறும் சிவப்புக் கோட்டுக்கு அவர் எவ்வித மதிப்பும் கொடுப்பதாகத் தெரியவில்லை. அதிபர் சிவப்புக் கோட்டைக் கீறி 8.30 எனக் குறித்தால் 9.00க்குப் பின்னதாகவே வழக்கமாக வரும் அவ்வாசிரியர் 8.31 ஐப் போட்டு ஒப்பமிடுவார். சில நாட்கள் இந்த நேரக் களவு தொடர்ந்தது. ஒரு நாள் அதிபர் வழக்கம் போல் 8.30க்கு சிவப்புக் கோட்டைக் கீறவில்லை. மறைவாக நின்று அன்றைய தினம் அந்த ஆசிரியர் வரும் நேரத்தைக் கவனித்தார். 9.10க்கு அவர் வருவதைக் கண்டு கையொப்ப புத்தகத்தில் சிவப்புக் கோட்டைக் கீறி 9.10 என்று ஒப்பமிட்டு அப்பாற் சென்று விட்டார்.

ஆசிரியர் சிவப்புக் கோட்டின் கீழ் 9.11எனப் போட்டு கையெழுத்திட்டார். அதிபர் தனது ஒறுத்தல் முறையைத் தொடர்ந்து செய்தார். மூன்று நான்கு நாட்களுக்குப் பிறகு அந்த ஆசிரியர் பாடசாலைக்கு நேரத்துக்கு வரத் தொடங்கினார்.

மற்றுமோர் ஆசிரியர் அதிபர் வகுப்பறைப் பக்கமாகச் செல்லும் நேரமெல்லாம் மாணவருக்கு அடித்துக் கொண்டிருந்தார். ஒரு நாள் அதிபர் அந்த வகுப்பறைக்குச் சென்று, 'உங்களுக்கு ஏன் அந்த ஆசிரியர் தினமும் அடிக்கிறார்? நீங்கள் அவரது பாட நேரத்திற் குழப்படி செய்கிறீர்களா? அவர் படிப்பிப்பதைக் கவனிப்ப தில்லையா? வீட்டு வேலையை ஒழுங்காகச் செய்வதில்லையா? என்றெல்லாம் விசாரித்தார். ஒரு மாணவர் எழுந்து, 'அவர் படிப்பிப்பதே இல்லை ஐயா. நீங்கள் வருவதைக் கண்டதும் தடியை எடுத்து அடிக்கத் தொடங்குகிறார். நீங்கள் போனபின் அடிப்பதை நிறுத்தி விட்டுச் சும்மா இருக்கிறார்' என்று துணிந்து சொன்னார். இதனைக் கேட்டு மிகவும் நொந்த அதிபர் அந்த வாரம் முழுவதும் வகுப்புக்குப் பக்கத்திலேயே நின்று அந்த ஆசிரியரின் கற்பித்தலைக் கண்காணிக்க வேண்டியதாயிற்று. பின்னரும் இடையிடையே கண்காணிப்புத் தொடர்ந்தது. ஆசிரியரும் பாடங்களை நன்கு ஆயத்தஞ் செய்துவந்து படிப்பிக்கலாயினார்.

ஒருமுறை கல்வி அமைச்சர் பதியுதீன் முகமது அவர்களைத் தமது வித்தியாசாலைக்கு அழைத்திருந்தார் முத்தையா அவர்கள். எல்லா ஏற்பாடுகளும் திட்டமிட்ட வாறு நடைபெற்றுக் கொண்டிருந்தன. இரண்டு நாட்களுக்கு முன்பாக நாவலப்பிட்டி முஸ்லிம் பெருமக்கள் சிலர் வந்து தமது பள்ளிவாசலுக்கு வந்தபின்னர்தான் அமைச்சர் பள்ளிக்கூடத்துக்கு வருவார் என்றும் அமைச்சரை அழைப்பதற்கு ஆட்கள் கொழும்புக்குச் சென்றுவிட்டார்கள் என்றும் தெரிவித்தனர். முத்தையா அவர்களுக்குச் சிறிது கவலையாக இருந்தது. அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டு விட்டன. நிகழ்ச்சி நிரலும் அச்சடிக்கப்பட்டுவிட்டது. அமைச்சர் பாடசாலைக்கு வரும் செய்தி பல நாட்களாகவே நாவலப்பிட்டியில் பரவிக் கொண்டிருந்தது. முஸ்லிம் மக்கள் முன்கூட்டியே இந்த ஒழுங்கினைச் செய்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். இப்பொழுது கடைசி நேரத்தில் வந்து குழப்புகிறார்களே என்று கவலையுற்றார். பக்கத்தில் இருந்த ஓர் ஆசிரியர் 'ஐயா இவர்கள் ஏற்கனவே இந்த ஒழுங்கினைச் செய்து விட்டு எமக்குச் சொல்லாமல்

மறைத்திருக்கிறார்கள். அமைச்சரைத் தாங்களே முதலில் வரவேற்க வேண்டும் என்ற நோக்கம் காரணமாக இருக்கலாம்' என்ற தமது கருத்தைத் தெரிவித்தார். 'ஒரு வாரத்துக்கு முன்னதாக நிகழ்ச்சி நிரலைக் கையளித்தபோது அமைச்சர் பள்ளிவாசலுக்கு முதலிற் செல்வது பற்றி எதுவுமே குறிப்பிட வில்லை. அதனால், அதன் பிறகே இந்த ஒழுங்கு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்' என இன்னொரு ஆசிரியர் கூறினார். 'நடப்பது போல நடக்கட்டும். எல்லாம் இறைவன் செயல்' என்று கருதி அலுவல்களைப் பார்க்கத் தொடங்கினார் அதிபர்.

கல்வி அமைச்சர் பள்ளி வாசலுக்கு முதலிற் செல்லவில்லை. நேராகத் திட்டமிட்டபடி கதிரேசன் குமார மகா வித்தியாலயத்துக்கே வருகை தந்தார்.

நேர்மையுடனும் நம்பிக்கையுடனும் ஒரு நல்ல காரியத்தைத் தொடங்கினால் அது நினைத்தபடி நடந்தேறும் என்பதற்கு மேற்படி சம்பவம் ஓர் உதாரணம்.

நேர்மையும் நம்பிக்கையும் முத்தையா அவர்களின் சமூகப் பணிகளுக்கும் ஆதாரமாக இருந்தன.

# 4

# சமூகத் தொண்டர்

முத்தையா அவர்களின் சமயப் பணி ஏழாலை இலந்தைகட்டி ஞான வைரவர் கோயிற் சூழலில் தொடங்கியதெனினும், அது முழுத்தாகத் தோடும் வேகத்தோடும் வளரத்தொடங்கிய இடம் நாவலப்பிட்டியாகும். சமயப் பணி சமூக நலன்களோடு இணைந்து செயற்பட வேண்டும் என்பது முத்தையா அவர்களின் கொள்கை. இந்தக் கொள்கையை நடைமுறைப் படுத்த வேண்டிய அவசியம் நா-வலப்பிட்டியில் இருப்பதை அவர் உணர்ந்தார். அவரது குடும்பம் ஏழைகளுக்கு உதவி வளர்ந்த குடும்பம். சமூக நலன்களில் அக்கறை காட்டுவது என்பது முத்தையா அவர்களின் இரத்தத்தோடு ஊறியதொன்று.

1939ஆம் ஆண்டுப் பிற்பகுதியிலிருந்து நாவலப்பிட்டியைக் களமாகக் கொண்டு மலைநாட்டுத் தமிழர்களுக்கு, முக்கியமாகத் தோட்டங்களில் வேலைசெய்யும் தொழிலாளர்களுக்கு, அவர்களது குடும்பப் பிரச்சனைகளைத் தீர்த்தல், நீதி நியாயங்களை விளக்குதல், நல்வழிகளுக்கான ஆலோசனைகளை வழங்குதல், கூட்டுப் பிரார்த்தனை நடத்துதல், திருமுறை ஓதுதல், நற்சிந்தனைப் பேச்சுக்களை நிகழ்த்துதல் முதலாய தொண்டுகளைச் செய்து, அவர்களை ஆன்மீக வாழ்வுக்கு இட்டுச் சென்றிருக்கின்றார் முத்தையா அவர்கள்.

அவர் நாவலப்பிட்டிக்குச் சென்ற காலத்தில் அங்குள்ள தோட்டத் தமிழ் மக்களின் பொதுவான பொருளாதார, வாழ்க்கை வசதிக் குறைபாடுகளுடன் பின்வரும் நிலைமைகளையும் அவரால் அவதானிக்கக் கூடியதாக இருந்தது:

1. தோட்டப்பகுதி மக்களுக்குச் சமய அறிவு அவ்வளவாக இருக்கவில்லை. வழிபாட்டு முறைகளையும் அவர்கள் செவ்வனே அறிந்திருக்கவில்லை. ஆங்காங்கு கற்களை நட்டுத் தாம் விரும்பிய தெய்வப் பெயர்களைச் சூட்டி வழிபட்டு வந்தனர்.

2. வாக்குவாதங்கள், மிரட்டல்கள், சண்டைகள் என்பன மக்கள் மத்தியில் நல்லுறவைக் கெடுத்துக்கொண்டிருந்தன.

3. குடிப்பழக்கத்தினாற் குடும்பங்களிற் குழப்பங்கள் நடைபெற்றன.

4. கிறித்தவ தாபனங்கள் இந்துக்களை மத மாற்றஞ் செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தன.

மக்களுக்கு இந்து சமய அறிவை வளர்த்தால், அதில் ஆர்வத்தை ஏற்படுத்தினால் சமயம் மாறமாட்டார்கள் எனக் கருதித் தனது மாணவர்களின் உதவியோடு அடிக்கடி தோட்டங்களுக்குச் சென்று சமயப் பேச்சுக்கள், கலந்துரையாடல்கள் என்பனவற்றை நடத்தலானார். இவரது பணிகளுக்கு நாவலப்பிட்டி இந்து வாலிபர் சங்கம் பெருந் துணையாக இருந்தது. 1940 முதல் இந்து வாலிபர் சங்கத்தின் செயலாளர் பதவியினை ஏற்று, அச் சங்கத்தின் மூலம் இளைஞர் மத்தியில் சமய விழிப்புணர்ச்சியைத் தோற்றுவிக்க அயராது உழைக்கலானார்.

ஒவ்வொரு தோட்டத்திலிருந்தும் மூன்று நான்கு இளைஞர்களைத் தெரிவு செய்து தொண்டர் பயிற்சி வகுப்புகளை நடத்தினார். பயிற்சி முடித்துக் கொண்டவர் தத்தம் தோட்டங்களின் சமய, சமூக விடயங்களுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டனர். தீர்க்க முடியாத குடும்பப் பிரச்சனைகள் இருப்பின் அதுபற்றித் தொண்டர்கள் முத்தையா அவர்களுக்குத் தெரிவிக்க, அவர் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு அவற்றைத் தீர்த்து வைப்பர். உள்ளூர்ப் பகுதிகளில் முத்தையா அவர்களுக்குப் பெருமதிப்பு. அவர் வருகின்றார் என்றால் தோட்டத்தில் பெரும் கூட்டம் கூடும். அவர் இப்படிச் செய்வது சரியாக இருக்கும் என்று சொன்னால் அதனை ஏற்றுக்கொண்டு அப்படியே செய்வார்கள். குடும்பப் பிரச்சனைகளும் அண்ணன் தம்பி அடிபிடிகளும் குடிவெறிச் சண்டைகளும் இவ்விதமே தீர்க்கப்பட்டன.

சமய பாட வகுப்புகள் நடத்தப்பட்டு பேச்சுப் போட்டிகள், கட்டுரைப் போட்டிகள், பஜனைப் போட்டிகள் வைக்கப்பட்டுப் பரிசுகள் வழங்கப்பட்டன. மாலை கட்டுதல், கோலம் போடுதல் போன்ற கைவினைகளிற் பெண்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டன.

தைப்பொங்கல், தீபாவளி ஆகிய தினங்கள் வழக்கத்துக்கு

மாறாக, அறிஞர் சொற்பொழிவுகள், சிறுவர் கலைநிகழ்ச்சிகள், பரிசளிப்புகள் என்பன உள்ளடங்கிய பெரு விழாக்களாகக் கொண்டாடப் பட்டன. மார்கழி மாதத்தில் ஒவ்வொரு நாளும் பஜனை நடத்தப்பட்டது. இதற்கு இராம பஜனை என்று பெயர். பஜனைக் குழு அதிகாலை மூன்று மணிக்கு ஒரு கோயிலிருந்து தொடங்கி விடிய ஆறு மணிக்கு அதே கோயிலில் வந்து முடியும்.

திருவெம்பாவைக் காலத்தில் பஜனைக் கோஷ்டி வீடு வீடாகச் செல்லும். ஒவ்வொரு வீட்டிலும் எண்ணெய்த் தானம் ஏற்கப்படும். சேர்ந்த எண்ணெய் முழுவதும் கோயிலுக்குக் கொடுக்கப்படும். கோயிலை வந்தடையும்பொழுது நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்களிலுமிருந்தும் பக்தர்கள் பஜனைக் கூட்டத்தில் சேர்ந்திருப்பர். இறுதி நாளன்று தோட்டங்களிலிருந்து வரவழைக்கப்படும் பஜனைக் கூட்டங்களின் மாபெரும் ஊர்வலத்துடன் மார்கழிப் பஜனை நிறைவுறும். ஆண்டுதோறும் 35 தோட்டங்கள் ஊர்வலத்திற் பங்குபற்றி வந்தன.

முத்தையா அவர்களின் முயற்சிகளின் பயனாக நாவலப்பிட்டிப் பகுதியில் (1) இந்து சமயத் தொண்டர் படை ஒன்று உருவாக்கப் பட்டது; (2) பல ஆடவர் குடிப்பழக்கத்தைக் கைவிட்டுக் குடும்ப நலன்களில் அக்கறை காட்டத் தொடங்கினர்; (3) சண்டை சச்சரவுகள் குறைந்தன; ஒற்றுமை ஓங்கியது; (4) அந்தர் யோகப் பயிற்சிகளில் அதிகமானோருக்கு நாட்டம் ஏற்பட்டது; (5) சமய உணர்வு வளர்ந்தது. (6) கோயில்களில் தமிழில் அர்ச்சனை செய்யும் முறை கொண்டுவரப்பட்டது; (7) த்மிழ் மொழிப் பற்றுத் தலையெடுத்தது; (8) மத மாற்றங்கள் மறைந்தன.

நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்கடம் பைத்தி ருக்கரக் கோவிலான்
தன்கடன் அடி யேனையும் தாங்குதல்
என்கடன் பணி செய்து கிடப்பதே

என்னும் அப்பர் சுவாமிகளின் வாக்குக்கேற்பப் பணிசெய்து கிடக்கும் முத்தையா அவர்களை நாவலப்பிட்டி நாவலர் எனல் தகும். சைவத்தையும் தமிழையும் வளர்த்த ஆறுமுக நாவலர் பெருமான் வழிநின்று தொண்டுகள் பல புரிவதற்கு நல்ல களமாக அமைந்தது நாவலப்பிட்டியேயாகும். இங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுப் பயன் தந்த திட்டங்கள் படிப்படியாகப் பிற மலைநாட்டுப் பகுதிகளுக்கும்

அறிமுகப்படுத்தப்பட்டன.

தோட்டக் கிராமங்களைச் சென்றடைவது எளிதான காரியமன்று. பிரதான வீதியிலிருந்து பல கிராமங்களுக்கு நடந்தே செல்லுதல் வேண்டும். அவ்வாறு நடக்கையில் சேறுகள், குத்தான ஏற்றங்கள், அட்டைக் கடிகள் எனப் பலவான சிரமங்களுக்குள்ளாக வேண்டும். தொண்டின்பத்தால் முத்தையா அவர்கள் அத்தகைய தொல்லைகளைப் பொருட்படுத்துவதேயில்லை.

முத்தையா அவர்கள் ஒரு நல்ல கொடையாளியுமாவார். அறிவுக் கொடையாளி மட்டுமல்லாது பொருட் கொடையாளியுமாக அவர் விளங்கினார். ஏழைகளின் தேவைகளை அறிந்து சட்டைப் பையில் இருக்கும் பத்தையோ பதினைந்தையோ கொடுத்து உதவுவார். இது இடைக்கிடை நடைபெறுவ தொன்றல்ல. அடிக்கடி நடைபெறுவது; இடக்கை அறியாதவாறு வலக்கையாற் செய்யப்படுவது.

மலைநாட்டிலிருந்து இவரது பணிகள் ஈழநாட்டின் பிற பகுதிகளுக்கு விரிவடைந்தன. இன்று வெளிநாடுகளிலும் இவரது தொண்டுகள் தொடர்கின்றன.

1965ஆம் ஆண்டு இலந்தைகட்டி ஞானவைரவர் ஆலயத்தில் உயிர்ப்பலியிடுவதைத் தடுத்து நிறுத்திய பெருமை முத்தையா அவர்களுக்குரியது. வாக்குவாதங்கள் எதுவுமின்றி, சுமுகமாகத் தீர்த்துவைக்கப்பட்ட இப் பிரச்சனை ஊர் மக்கள் இவர்மீது கொண்டுள்ள மதிப்பை நன்கு எடுத்துக் காட்டுகின்றது. இதனைத் தொடர்ந்து பல ஊர்களில் உயிர்ப்பலியிடல் நிறுத்தப்பட்டதென்பது குறிப்பிடத் தக்கது.

1983ஆம் ஆண்டு யூலாய்க் கலவரத்தினாற் பாதிக்கப்பட்டு அனைத்தையும் இழந்த நிலையில் அகதிகளாகத் தமிழ்ப் பகுதிகளுக்குத் திரும்பியவருக்கு ஆங்காங்கு முகாங்கள் அமைத்து ஆதரவளிக்கப்பட்டது. சாவகச்சேரித் தொகுதியிலும் அத்தகைய தற்காலிக இருப்பிடங்கள் அமைக்கப்பட்டன. இவற்றில் உதவி புரியக் கிறித்தவ தாபனங்களைச் சேர்ந்த தொண்டர்கள் பலர் முன்வந்தனர். இந்துசமய நிறுவனங்கள் எதுவுமே உதவிக்கு வரவில்லை. அங்கு நின்று அகதிகளுக்கு ஆறுதல் கூறிய ஒரேயொரு இந்து சமயப்

பெரியார் முத்தையா அவர்களே. இத்தனைக்கும் அவரும் நாவலப்பிட்டியில் அனைத்தையும் இழந்த நிலையில் வந்து சேர்ந்த ஓர் அகதிதான். ஆனால் அவர் துறவி. பொருள் பண்ட இழப்பு அவரைப் பாதிக்கவில்லை. எல்லாம் இறைவன் செயல் என்றிருப்பவர்க்குக் குறை என்பதொன்றில்லை. எனினும் அவர் ஒரு வித்தியாசமான துறவி. சமூகப் பற்றுள்ள துறவி. மற்றவர் துயரிற் பங்கு கொண்டு ஆறுதல் கூறி ஆதரிக்க அவர் சாவகச்சேரிக்கு மட்டுமல்லாது பிற பகுதி முகாங்களுக்கும் சென்றமை சமூக நலனில் அவருக்கு இருந்த ஆர்வத்தையே காட்டுகின்றது.

சமயச் சொற்பொழிவுகள், கட்டுரை விளக்கங்கள், புராணம் படித்தல், சீர்திருத்தக் கலந்துரையாடல்கள், சமய வகுப்புகள், யோகாசனப் பயிற்சிகள், சமயப் பத்திரிகை வெளியீடு போன்ற பணிகளில் ஈடுபட்டபோதிலும் முத்தையா அவர்களுக்கு மிகவும் விருப்பமானது கூட்டுப் பிரார்த்தனையேயாகும்.

கூட்டுப் பிரார்த்தனையை ஆரம்ப காலங்களில் தமது கிராமமாகிய ஏழாலையில் அடிக்கடி நடத்தி அதனை வளர்த்தெடுத்த பெருமை இவருக்கு உண்டு. இன்று யாழ்ப்பாணம், வவுனியா, மலைநாடு, கொழும்பு, மட்டக்களப்பு, இந்தியா, இந்தோனேசியா, மலேசியா, சிங்கப்பூர், கனடா, சுவிற்சலாந்து என்று எங்கெங்கு செல்லினும் அங்கெல்லாம் அன்பர்களைக் கூட்டுப் பிரார்த்தனைகளில் ஈடுபடுத்தி வருகின்றார். கூட்டுப் பிரார்த்தனை பக்தியை வளர்ப்பதோடு மக்கள் மத்தியில் ஏற்றத் தாழ்வு மனப்பான்மையை இல்லாமற் செய்து ஒற்றுமையை வளர்க்க வல்லது. நல்லுறவை வளர்த்து ஒருவருக்கொருவர் உதவியாக வாழத்தக்க மனப் பக்குவத்தைத் தர வல்லது.

கூட்டுப் பிரார்த்தனையோடுகூடிய மற்றுமொரு வழிபாட்டுமுறை பாதயாத்திரையாகும்.

# 5

# பாத யாத்திரிகர்

புனித தலங்களை நோக்கி மேற்கொள்ளப்படும் நடைப் பயணங்கள் பாத யாத்திரைகள் எனப்படும். தமிழ் நாட்டிற் பாத யாத்திரைகளைத் தொடக்கி வைத்தவர்கள் எமது நாயன்மார்கள். நெடுந்தூரப் போக்குவரத்துக்கு உகந்த பாதைகளும் வசதிகளும் குறைவாக இருந்த அந்தக் காலத்தில் சிவதலங்களை நாயன்மார் நடந்தே தரிசித்தனர். எந்தத் தலத்துக்குச் செல்கிறார்களோ அந்தத் தலத்தின்மீது தேவாரங்களைப் பாடியவாறு செல்வர். அவர்கள் பாடப் பின்தொடர்ந்து செல்லும் பக்தர் கூட்டமும் அவர்களோடு சேர்ந்து பாடிக்கொண்டு செல்லும். நெடுந்தூர யாத்திரைகளின்போது சில சமயங்களில் கடும் வெயில், இடி மின்னல், மழை காற்றுப் போன்ற இயற்கைச் சக்திகளாலும், கள்வர்களாலும் காட்டு விலங்குகளாலும் தீங்குகள் ஏற்படுவதுண்டு. அத்தகைய தீங்குகள் நேராவண்ணம் சிவனருள் வேண்டிப் பாடிய சந்தர்ப்பங்களும் உள்ளன. இக்காரணம் பற்றியே திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருநீலகண்டப் பதிகம், கோளறு பதிகம் போன்றவற்றைப் பாடியருள நேர்ந்தது.

உண்மையில், எமது சமயத்தில் பாத யாத்திரை என்பது ஆன்மா சிவத்தை நோக்கிச் செல்கின்ற யாத்திரை யாகும். மணிவாசகப் பெருமான் அருளிச்செய்த 'யாத்திரைப் பத்து' இத்தத்துவத்தை நன்கு தெளிவாக்குகின்றது. எமது வாழ்க்கை பரம்பொருளை நோக்கிச் செல்கின்ற ஒரு பயணம். நாம் அடுத்தடுத்து எடுத்துவரும் பிறவித் தொடர் பிறப்பறுக்கும் பிஞ்ஞகனின் பெய்கழல்களைச் சேர்வதுடன் முடிவடையும்.

ஈழத்திருநாட்டில் மிகவும் பெயர் பெற்ற பாத யாத்திரை கதிர்காம யாத்திரையாகும். திருக்கோணேஸ்வரம், முனீஸ்வரம், திருக்கேதீஸ்வரம், மாமாங்கம், நல்லூர், மாவிட்டபுரம், கீரிமலை, செல்வச்சந்நிதி, நயினாதீவு முதலாய பிற தலங்களுக்கும் யாத்திரைகள்

மேற்கொள்ளப்படுவது வழக்கம். காலப் போக்கில் போக்குவரத்து வசதிகள் பெருக, பாத யாத்திரைகளும் குறையலாயின.

குறைந்துவந்த இவ் வழிபாட்டுமுறையை மீண்டும் வளர்த்தெடுத்த பெருமை முத்தையா அவர்களைச் சாரும். பாதை அமைப்புகளும் வாகன வசதிகளும் மலிந்துள்ள காலத்தில் கோயில்களுக்கு ஏன் நடந்து போகவேண்டும் என்று கேட்கப்பட்டபோது முத்தையா அவர்கள், இருந்துகொண்டு செய்யும் கூட்டுப் பிரார்த்தனைகளாலே கிடைக்கும் பலன்களிலும் அதிக பலன்கள் பாடிக்கொண்டு செல்லும் பாத யாத்திரைகளினாற் கிடைக்குமென விளக்கம் அளித்தார்கள்.

'பாத யாத்திரையிற் சாதி வேறுபாடு, ஏற்றத்தாழ்வுகள் எதுவும் இன்றி எல்லோருமே பங்குபற்றலாம். இறைவன் முன்னிலையில் யாவரும் சமம். ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற உயர்ந்த, பரந்த தத்துவத்தை நடைமுறைப்படுத்துவதே பாதயாத்திரை. மேலும், ஓரிடத்தில் இருந்து கொண்டு செய்யும் கூட்டுப் பிரார்த்தனை இரண்டொரு மணித்தியாலங்களில் முடிந்துவிடக் கூடியது. நடந்து கொண்டு செய்யும் கூட்டுப்பிரார்த்தனை கோயிலின் தூரத்தைப் பொறுத்துப் பலமணி நேரங்களில் அல்லது நாட்கணக்கில் மேற்கொள்வது. கூட்டுப் பிரார்த்தனையில் ஓர் இடத்தில் அல்லது ஓர் ஊரில் உள்ளவர்களே பங்குபற்ற முடியும். பாத யாத்திரையிற் பல ஊர்கள் பங்குபற்றலாம். கோயில் தரிசனங்களுக்கும் இது வழிவகுக்கின்றது.

'யாத்திரிகர் மத்தியில் சமய உணர்வு, இறை பக்தி என்பவற்றுடன் இடர்ப்பாடுகளைப் பொறுத்துக்கொள்ளும் இயல்பினையும், ஒருவருக்கொருவர் உதவும் பண்பினையும் நல்லுறவையும் ஒற்றுமையையும் வளர்க்கப் பாதயாத்திரை வழிபாட்டுமுறை உதவுகின்றது' என்றெல்லாம் விளக்கம் அளித்தார்.

பாத யாத்திரை வழிபாட்டுமுறையில் முத்தையா அவர்களை ஈடுபடத் தூண்டியது திருவண்ணாமலை அருணகிரிநாதர் விழாவாகும். 1948ஆம் ஆண்டு இவ்விழாவிற் கலந்துகொள்ள முத்தையா அவர்கள் சென்றிருந்தார்கள். விழா மூன்று நாட்கள் நடந்தது. இரவு பகலாகப் பக்தர்கள் வருவதும் போவதுமாக இருந்தார்கள். வரும் பொழுது கூட்டம் கூட்டமாகத் திருப்புகழைப்

பாடியவாறு திருவீதியைச் சுற்றிவந்து இறைவனை வழிபட்ட பின்னரே விழாமண்டபத்துக்கு வருவார்கள். திருவண்ணாமலைத் தேரோடும் வீதி எட்டு மைல் தூரமுள்ளது. எட்டு மைல் தூரமுள்ள வீதியைச் சுற்றி ஒரு நாள் 65 திருப்புகழ்க் குழுக்கள் பஜனை செய்துகொண்டு வந்தன. அதனைக் கண்ணுற்ற முத்தையா அவர்களின் மனத்தில் அத்தகைய நடை பஜனைகளை ஈழத்திலும் நடத்த வேண்டும் என்ற எண்ணம் திருவருளால் எழுந்தது.

மலைநாட்டில் ஏற்கனவே இவர் நடத்தி வந்த சிறு நடை பஜனைகள் பிற பகுதிகளிற் பாத யாத்திரைகளாக விரிவடைந்தன. 1954ஆம் ஆண்டு நல்லூர் கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழா தினத்தில், ஏழாலை இலந்தைகட்டி ஞானவைரவர் ஆலயத்திலிருந்து நல்லூருக்குப் பாதயாத்திரையைத் தொடக்கி வைத்ததுடன், ஆண்டு தோறும் பக்தி பரவசத்துடன் அதனை முன்னின்று நடத்தியும் வந்திருக்கின்றார்.

1964ஆம் ஆண்டு நயினாதீவு நாகபூஷணி – நல்லூர் பாத யாத்திரை ஒன்றினை நடத்தினார். நல்லூர்த் தேர்த்திருநாளுக்கு முன்னதாக நாகபூஷணி அம்மன் கோயிலிலிருந்து புறப்பட்டு, வழியில் புங்குடுதீவிலே தங்கிச் சில கோயில்களையுந் தரிசனம் செய்து கொண்டு, தேர் நாளன்று நல்லூரை அடைந்து முருகனை யாத்திரிகர் வழிபட்டனர்.

1984ஆம் ஆண்டு சாவகச்சேரித் தொகுதியில் செருக்கற் பிள்ளையார் கோயிலில் ஆரம்பித்துக் கச்சாய் வீரபத்திரர் கோயிலுக்குப் பாத யாத்திரை ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

1986ஆம் ஆண்டு வலிகாமம் வடக்கில் உள்ள புன்னாலைக் கட்டுவன் ஆயாக்கடவையில் இருந்து சுன்னாகம் கதிரைமலைச் சிவன் கோயிலுக்கும் நல்லூர், யாழ்ப்பாணம் ஆகிய தொகுதிகளில் உள்ள சில உள்ளூர்க் கோயில்களிலிருந்து நல்லூருக்கும் பாத யாத்திரைகள் பல ஒழுங்கு செய்யப்பட்டன.

1987ஆம் ஆண்டு சாவகச்சேரித் தொகுதியில் நெடுந்தூரப் பாதயாத்திரை ஒன்றை முத்தையா அவர்கள் ஒழுங்கு செய்தார்கள். அப்பொழுது ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டிருந்த காலம். பல அன்பர்கள் அத்தகைய சூழ்நிலையில் பாத யாத்திரையை

மேற்கொள்வது சரியில்லை என்று வாதிட்டனர். இராணுவம் மறித்தால் என்ன செய்வதென்று கேட்கப்பட்டபோது, மறித்த இடத்தில் இருந்து எல்லோரும் பிரார்த்தனை செய்யலாம் என்று பதில் அளித்தார் முத்தையா அவர்கள். தற்செயலாகச் சுட்டால் என்ன கதி என்றதற்கு, 'இத்தகைய கேள்விகள் இறைவன் மீது நம்பிக்கை இல்லாத கேள்விகள், சுட்டால் நான்தானே முதற் சாவேன். பயப்பட வேண்டாம்' என்று மகாத்மா காந்தி அடிகளைப் போல வைராக்கியப் பதில்களைக் கூறி,

அச்சமில்லை நெஞ்சே அரன் நாமங்கள்
நிச்சலும் நினையாய் வினை போயறக்
கச்சமா விடம் உண்டகண் டாவென
வைச்ச மாநிதி யாவர்மாற் பேறரே

என்னும் அப்பர் பெருமானின் திருக்குறுந்தொகையைப் பாடி அன்பர்களைத் தேற்றினார்.

யாத்திரை திட்டமிட்டபடி மீசாலை தட்டாங்குளப் பிள்ளையார் கோயிலிலிருந்து அதிகாலை ஆறு மணிக்கு ஆரம்பமாகி, வரணி வழியாக வழியில் உள்ள கோயில்களைத் தரிசித்துக்கொண்டு கச்சாய் வீரபத்திரர் கோயிலை வந்தடைய 14 நாட்கள் எடுத்தன. யாரும் மறிக்கவுமில்லை; எதுவும் நடக்கவுமில்லை.

இதுபோன்ற பலநாட் பாத யாத்திரையிற் பொதுவாக 30–35 பேர் பங்குபற்றுவார்கள். கிராம சேவகர், உதவி அரசாங்க அதிபர் போன்ற உத்தியோகத்தர் வழிகாட்டல், கூட்டம் நடத்துதல், உணவு ஒழுங்கு செய்தல், இரவு தங்குதற்கு வசதிகள் செய்தல் போன்ற ஏற்பாடுகளுக்குப் பொறுப்பாக இருப்பார்கள். இடையிற் களைத்தவர்களுக்கும் நடக்க முடியாதவர்களுக்கும் வாகன வசதிகளும் செய்து தருவார்கள். காலைமுதல் மாலைவரை நடந்து இரவில் தங்குவதற்குத் திட்டமிடப்பட்ட இடத்தில் யாத்திரிகரை வரவேற்கக் கூட்டம் ஒன்றைக் கிராம சேவகர் நடத்துவார். இதில் அரசாங்க அதிபர் உட்படப் பல சமயப் பெரியோர் உரை நிகழ்த்துவர். அடுத்தநாள் அதிகாலை யாத்திரை தொடரும். வழியில் தண்ணீர்ப் பந்தல் நிறுவி நிறைகுடம் வைத்து யாத்திரிகரை வரவேற்கும் நிகழ்ச்சிகளும் இடம் பெறும். யாத்திரை முடிவடையும் கோயிலிலும் யாத்திரிகரை வரவேற்க ஏராளமான மக்கள் திரண்டிருப்பர். வீதிவலப் பிரார்த்தனை, விசேட அர்ச்சனையோடுகூடிய வழிபாடு, சொற்பொழிவு, அன்னதானம் முதலிய

நிகழ்ச்சிகளுடன் யாத்திரை நிறைவுபெறும்.

பாத யாத்திரை வரவேற்பு வைபவங்களில், 'ஆத்மஜோதி வருக! ஆத்மஜோதி வாழ்க!' வென அன்பர்கள் குரல் எழுப்பி முத்தையா அவர்களை வரவேற்பது வழக்கம். முத்தையா அவர்களின் மொழி, சமயம், சமூகம் என்னும் முத்திறப்பட்ட பணிகளின் விளக்கமாகவும் தொடர்புப் பாலமாகவும் அமைந்தது அவரது 'ஆத்மஜோதி' பத்திரிகையாகும்.



குழந்தையை முதன் முதலாகத்
தொட்டிலில் வைக்கும் வைபவத்தில்

# 6

# ஆத்மஜோதி

'ஆத்மஜோதி' என்ற பெயரிலான மாதாந்த சஞ்சிகை 1948ஆம் ஆண்டு நாவலப்பிட்டியில் முத்தையா அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. அதனைப் படிக்காதவர்கள் இருந்தாலும் அதன் பெயரைக் கேள்விப்படாதவர்கள் இருக்கமாட்டார்கள். அவ்வளவுக்கு அதன் பெயர் இன்று இலங்கை, தமிழ்நாடு, சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேசியா, கனடா முதலாய நாடுகளிலும் முத்தையா அவர்களின் சீடர்கள் வாழும் பிற இடங்களிலும் பிரபலமாகியுள்ளது.

நாவலப்பிட்டித் தோட்டத் தொழிலாளரும் முத்தையாவின் மாணாக்கருமாகிய அன்பர் ஒருவர் தனது மகனுக்கு ஆத்மஜோதி என்றே பெயர் வைத்துள்ளார். பிற்காலத்தில் இந்தச் சீடர் யாழ்ப்பாணம் மில்க்வைற் தாபனத்தில் வேலைசெய்த காரணத்தினால் பலருக்கும் இச்செய்தி பரவலாயிற்று.

ஏழாலையில் முத்தையா அவர்களின் வீட்டுக்குச் செல்லும் வீதிக்கு 'ஆத்மஜோதி வீதி' எனப் பெயரிட்டுத் தம்மைப் பெருமைப் படுத்திக் கொண்டனர் ஏழாலை மக்கள்.

பத்திரிகை நடத்திய ஆசிரியரையே 'ஆத்மஜோதி' யெனத் தமிழ்கூறும் நல்லுலகம் அழைக்கலாயிற்று. 'ஆத்மஜோதி' என்றால் முத்தையா, முத்தையா என்றால் 'ஆத்மஜோதி'.

இத்தகைய பெயர்பெற்ற ஆன்மீக சஞ்சிகை முத்தையா அவர்கள் தொடங்குவதற்கு யார் காரணம்?

நயினாதீவைச் சேர்ந்தவரும் இலங்கைப் புகையிரத இலாகாவில் வேலை பார்த்தவருமாகிய பெரியார் க. இராமச்சந்திரா அவர்களை அறியாதவர் இருக்கமுடியாது. 1927ல் மகாத்மா காந்தி இலங்கைக்கு

வருகை தந்தபோது இராமச்சந்திரா நாவலப்பிட்டியில் உத்தியோகம் பார்த்துக் கொண்டிருந்தார். அவரது இல்லத்திலேயே மகாத்மா காந்தி நாவலப்பிட்டிக்குச் சென்றபோது தங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அக்காலத்தில் பல இந்தியப் பெரியார்களை இலங்கைக்கு அழைப்பதற்குக் காரணமாக இருந்தவரும் இராமச்சந்திராவே என்பதைப் பலரும் அறிவர்.

இவர் ஓர் இரமண பக்தர். இலங்கையில் இரமணருக்குக் குருபூசை செய்யத் தொடங்கியவரும் இவரே. இரமணருக்கு மட்டுமல்லாது பகவான் அரவிந்தருக்கும் பூசை செய்துவந்தார்.

இராமச்சந்திரா கொழும்பில் பணிபுரிந்த காலத்தில் கொள்ளுப்பிட்டியில் இல. 3, டீல் பிளேஸ் என்னும் இடத்தில் குடிகொண்டிருந்தார். அவரது இல்லத்தில் 1948ஆம் ஆண்டு திருவருள் கூடிய சம்பவம் ஒன்று நடைபெற்றது. அந்த வருடம் ஆகஸ்ட் மாதம் 15ம் திகதி தான் நடத்தும் அரவிந்தர் குருபூசையில் கலந்து கொள்ளுமாறு திரு. நா. முத்தையாவை அழைத்திருந்தார் இராமச்சந்திரா. பூசை முடிந்து இருவரும் உரையாடிக் கொண்டிருந்தனர். இந்து சாதனம் பத்திரிகையில் முத்தையா எழுதிய ஆறுமுக நாவலர் பற்றிய கட்டுரையைத் தான் படித்ததாக இராமச்சந்திரா குறிப்பிட்டார். அந்தக் கட்டுரையில் ஆறுமுக நாவலர் நடத்திய சமயப் பத்திரிகைகளை எவரும் தொடர்ந்து நடத்தாமை பற்றிக் கவலை தெரிவித்திருந்தார் முத்தையா. இதுபற்றிக் குறிப்பிட்ட இராமச்சந்திரா அவர்கள், 'கவலைப் பட்டுக்கொண்டிருப்பதில் பயனில்லை. ஆறுமுக நாவலர் வழியில் நாம் இந்தக் காலத்துக்கேற்ப ஒரு புதிய பத்திரிகையை நடத்துவோம். பத்திரிகையின் பெயர் 'ஆத்மஜோதி'. அதற்கு நீரே நிர்வாக ஆசிரியர், என்று தீர்க்கமாகக் கூறி முடித்தார். தன்னாற் பணத்தோடு சம்பந்தப்பட முடியாதென்றும் கௌரவ ஆசிரியராக வேண்டுமாயின் உதவிபுரிவதாகவும் கூறி முத்தையா அவர்களை ஊக்குவித்தார்.

அரவிந்தர் பகவான் குருபூசைத் தினத்தில் இப்படி ஒரு தீர்மானம். இதனை ஒரு தெய்வ சித்தமாகக் கொண்டு பத்திரிகை தொடங்குவதற்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்தார் முத்தையா அவர்கள். பத்திரிகை 1948ஆம் ஆண்டு திருக்கார்த்திகைத் தினத்தில் சிவனொளிபாத மலையின் படத்தைத் தாங்கிய அட்டைப் படத்துடன் வெளியிடப்பட்டது. வருடச் சந்தா 3 ரூபாய்; ஆயுள் சந்தா 75 ரூபாய்.

ஆக, முத்தையா அவர்கள் இந்துசாதனப் பத்திரிகையில் எழுதிய கட்டுரையே 'ஆத்மஜோதி' சஞ்சிகையைத் தொடங்குவதற்குக் காலாக அமைந்தது எனலாம். அந்தக் கட்டுரை பெரியார் இராமச்சந்திரா அவர்களின் சிந்தனையைத் தூண்ட, அவர் முத்தையாவே பத்திரிகை நடத்துதற்குத் தகுந்த ஆசிரியர் எனத் தீர்மானித்துப் பத்திரிகைக்குப் பெயரும் சூட்டி முத்தையாவை முறுக்கிவிட்ட பாங்கு சிந்திக்கற் பாலது. தெய்வ சிந்தனையுடையார் வாயிலாகத் தெய்வம் தன் கருமங்களைச் செய்விக்கின்றது என்பதற்கு இதுவுமோர் உதாரணம்.

'ஆத்மஜோதி' முற்றுமுழுதான ஒரு சமயப் பத்திரிகை. அதனை நடத்துதற்கு சமய அறிவும் எழுத்தாற்றலும் மட்டும் இருந்தாற் போதாது. தெய்வம் என்பதோர் சித்தம் தெளிந்து, மனப் பக்குவத்தில் உயர்ந்து, சமயசாரங்களைக் கடைப்பிடித்து, உன்னதமான ஒழுக்க சீலராக விளங்குபவரே சமய நெறிசார்ந்த தத்துவங்களை எடுத்து விளக்கும் தகைமையுடையவர். இத்தகைய தகைமைகளை திரு. முத்தையாவிடம் கண்ட இராமச்சந்திராவின் நெஞ்சம் போற்றுதற்குரியது.

அந்தக்காலத்தில் பத்திரிகை நடத்துவதென்பது இலகுவான காரியமன்று. இராமச்சந்திரா அவர்கள் கொழும்பில் இருந்து சந்தாதாரர்கள் பலரைச் சேர்த்து உதவினார்கள். வேறுபல தொண்டர்களும் ஆயுள் சந்தா கொடுத்து உதவினர். இருப்பினும் முத்தையாவின் சம்பளத்தில் கணிசமான தொகை 'ஆத்மஜோதி' பதிப்புச் செலவுக்குப் போய்க்கொண்டிருந்தது. 'ஆத்மஜோதி' வியாபார நிறுவனங்களின் விளம்பரங்கள் எதுவுமில்லாத பத்திரிகை என்பது குறிப்பிடத்தக்கது.

காலப்போக்கில் வாசகர் தொகை அதிகரித்தது. பாடசாலைகள், வாசிக சாலைகள் போன்ற நிறுவனங்களின் கவனத்தையும் 'ஆத்மஜோதி' ஈர்க்கலாயிற்று. பாலாவிக் குளத்தைச் சீர்செய்த நீர்பாசனப் பொறியியலாளர் ஆறுமுகம் என்பவர் பல சந்தாதாரர்களைச் சேர்த்து மிகுந்த ஆதரவு நல்கியதை முத்தையா அவர்கள் இன்றும் மறவாது போற்றிவருகின்றார்.

மாதாமாதம் 2000 பிரதிகள் அச்சிடப்பட்டன. தலையங்கத்தைக் கௌரவ ஆசிரியர் திரு. இராமச்சந்திரா அவர்களே எழுதிவந்தார். இந்தப் பணியை அவர் தமது இறுதிக் காலம் வரை (1965) தவறாது

செய்திருக்கின்றார்.

ஒருமுறை சுவாமி சிவானந்தா சரசுவதி ஆத்மஜோதிச் சாந்தாதாரர்கள் எத்தனை பேர் என்று கேட்டார். இரண்டாயிரம் பேர் என்று பதிலளித்தார் முத்தையா அவர்கள். சுவாமிகள் மிகுந்த மகிழ்ச்சியடைந்து, 'இரண்டாயிரம் என்றால் இருபதினாயிரம் பேர் பத்திரிகையைப் படிக்கின்றார்கள் என்று அர்த்தம்' என்று கூறி முத்தையா அவர்களின் முதுகிலே தட்டிப் பாராட்டினார்.

1960ல் ஆத்மஜோதி அச்சுக்கூடத்தை நாவலப்பிட்டியில் முத்தையா ஆரம்பித்தார். அச்சுக்கூடத்தை திரு. க. இராமச்சந்திரா போன்ற பெரியார்களின் முன்னிலையில் சுவாமி சச்சிதானந்தர் திறந்து வைத்தார். இந்த அச்சுக்கூடமே பின்பு ஆத்மஜோதி நிலையம் என்றும் வழங்கப்படலாயிற்று.

ஆத்மஜோதி அச்சுக்கூடம் முத்தையா அவர்களின் தம்பியார் திரு. அருமைநாயகத்தின் நிர்வாகத்தில் சிறப்புற இயங்கி வந்தது. இராமபிரானுக்கு இலக்குமணன் துணையானது போல முத்தையாவின் குறிப்பறிந்து நடந்து அவரது பணிகளுக்கெல்லாம் துணைநின்ற பெருமை திரு. அருமைநாயகத்துக்குரியது. இவர்கள் இருவரும் ஒருமனத்தராய்ச் செயற்படுவதையும் ஒன்றாகப் போய்வருவதையும் பல சந்தர்ப்பங்களில் கண்ணுற்ற பாலயோகி இராமதாஸ் அவர்கள் ஒரு கூட்டத்தில் இராம இலட்சுமணர் என இவர்களைக் குறிப்பிட்டமை மிகவும் பொருத்தமான கூற்றேயாகும்.

காலப்போக்கில் ஆத்மஜோதி நிலையம் ஆத்மஜோதி ஆச்சிரமம் என்றும் வழங்கப்படலாயிற்று.

'ஆத்மஜோதி' யின் பத்தாவது ஆண்டிலும் பதினைந்தாவது ஆண்டிலும் விசேட மலர்கள் வெளியிடப்பட்டன. வெள்ளிவிழாக் கொண்டாட்டத்தையொட்டியும் சிறப்பு மலர் ஒன்று வெளியிடப்பட்டது.

விளங்க முடியாத பல இந்து சமயத் தத்துவங்களைச் சாதாரண மக்களும் விளங்கும் வகையில் எளிமையான, இனிமையான மொழியிலான கட்டுரைகளாகவும் கதைகளாகவும் தாமாக எழுதியும் பிற அறிஞர்களைக் கொண்டு எழுதுவித்தும் மக்கள் மத்தியில் ஆறுமுக நாவலர் வழிநின்று சமய அறிவை 'ஆத்மஜோதி' பத்திரிகை மூலம்

பரப்ப முத்தையா அவர்கள் பொருட் செலவையும் நோக்காது அமைதியான முறையில் உழைத்ததை இந்து சமய உலகம் நன்கு அறியும்.

மலைநாட்டு மக்களுக்கு ஆத்மீகமான பத்திரிகை எதுவும் இல்லை என்ற குறையைப் போக்கிய பெருமையுடையது 'ஆத்மஜோதி.' அதுமட்டுமன்றி இலங்கை முழுவதிலுமே சிறுவர் தேவைகளைக் கவனித்த முதல் இந்து சமயப் பத்திரிகையும் இதுவேயாகும்.

இத்தகைய சிறந்த பத்திரிகை அமைதியான முறையில் வெளிவரக் காரணமாக இருந்த ஆத்மஜோதி நிலையமும் அச்சுக்கூடமும் 1983ஆம் ஆண்டு யூலாய்க் கலவரத்தின்போது முற்றாக அழிக்கப்பட்டமை, முத்தையா அவர்களை உலகளாவிய வகையில் சமயப் பணிகளில் ஈடுபடத் தூண்டியது.

சமய இலக்கிய வளர்ச்சியில் 'ஆத்மஜோதி' யின் பங்கு தனியாக ஆராயப்பட வேண்டிய தொன்று.

# 7

# அரிய எழுத்தாளர்

'ஆத்மஜோதி' பத்திரிகை மூலம் முத்தையா அவர்கள் தாம் ஓர் அரிய எழுத்தாளர் என்பதனை நிலைநாட்டி இருக்கின்றார். 'ஆத்மஜோதி' பத்திரிகையில் மட்டுமல்லாது பிற பத்திரிகைகளிலும் அவரது ஆக்கங்கள் வெளிவந்திருக்கின்றன. அவரது எழுத்துக்கள் பெரிதும் இந்து சமயம் சம்பந்தமானவை. எனினும், தமிழ் மொழி, தமிழர், தமிழர் பண்பாடு தொடர்பான கட்டுரைகள் கதைகள் என்பனவற்றையும் அவர் எழுதி இருக்கின்றார்.

சில எழுத்தாளர் தாம் விரும்புவதையே கூடுதலாக எழுதுவர். தாம் விரும்புவதையே மக்களும் விரும்ப வேண்டும் அல்லது தமக்குப் பிடிப்பானவையே மக்களுக்கும் பிடித்திருக்கும் என்பது இவர்களது எண்ணம் போலும்.

இன்னுஞ் சிலர் மக்களுக்கு எவை எவை பிடிக்குமோ அவற்றையே அதிகமாக எழுதுவர். மக்கள் விரும்புவதை எழுதினாலே பத்திரிகைகள் / நூல்கள் விற்பனையாகும் என்பது அவர்களது கருத்துப் போலும்.

முத்தையா அவர்கள் இவ்விரு வகுப்பிலும் அடங்காத அரிய எழுத்தாளர் கூட்டத்தைச் சேர்ந்தவர். மக்களுக்கு எவை தேவையென அறிந்து அவைபற்றி எழுதுகின்றவர் இவர். தேவையை விருப்பத்திலிருந்து வேறுபடுத்த வேண்டிய ஒரு தேவை இருக்கின்றது. மக்கள் தேவையும் அவர்களின் விருப்பங்களும் எப்பொழுதும் ஒன்றாக இருப்பதில்லை. மக்கள் முன்னேற்றத்தில், நாட்டு வளர்ச்சியில் அக்கறையுள்ளவர்கள் மக்கள் விருப்பத்துக்கும் அவர்களின் தேவைக்குமுள்ள வேறுபாட்டை நன்கு அறிந்துகொள்வது அவசியம். இந்த வேறுபாட்டை ஆழவாராயா அரசியல் தலைவர்களும் பிழைவிட்டிருக்கின்றார்கள்.

ஓர் ஊரிலே குழாய்க்கிணறு தோண்ட வேண்டிய தேவை இருந்தது. ஆனால், பொது மக்கள், திரைப்பட மாளிகை வேண்டும் என்று கேட்டனர். அரசாங்கமும் வரவுள்ள தேர்தலை மனதிற் கொண்டு படமாளிகையைக் கட்டிக் கொடுத்தது.

மற்றுமோர் ஊரில் ஒருசில பெரியோர் பிரதான கற்பாதைக்குத்தார் போட்டுத் தரவேண்டுமெனக் கேட்டனர். ஆனால் பெரும்பான்மையானோர் மதுக்கடை தேவையெனக் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தனர். மதுக்கடை திறக்கப்பட்டது.

இவ்விதமே, பல எழுத்தாளர்களும் மக்களின் கீழ்த்தர இச்சைகளுக்குத் தாளம் போடுபவர்களாக உள்ளனர். முத்தையா அவர்கள் மக்களுக்குத் தேவை அன்பு, பண்பு, அறம், ஒழுக்கம், ஒற்றுமை, நீதி நியாயம், தெய்வ நம்பிக்கை என்ற கோட்பாட்டில் தனது எழுதுகோலைப் பயன்படுத்தி வருகின்றார். இது ஓர் இலட்சியம்; உயர்ந்த இலட்சியம்; நீண்ட கால இலட்சியம். அவர் ஓர் இலட்சிய எழுத்தாளர்.

ஒழுக்கம் இவரது மூச்சு என்றால் சமூகம் இவரது உடல். மூச்சுப் போனால் உடல் இல்லை. ஒழுக்கம் போனால் சமூகம் இல்லை. ஆன்மீக வாழ்வே ஒழுக்கத்தை நிலைபெறச் செய்வது என்ற நோக்கில் இவரது எழுத்துக்கள் அமைந்திருக்கக் காணலாம்.

சமய தத்துவங்களைக் கட்டுரைகளாகவும் கதைகளாகவும் விளக்குவார். ஓரளவு படிப்பறிவு கொண்டவர்களும் மிக எளிதில் விளங்கிக் கொள்ளும் வகையில் இவரது தமிழும் நடையும் அமைந்திருக்கும். ஓர் உதாரணம்,

*'சிவராத்திரி என்ற சொல் சிவனுடைய ராத்திரி, சிவமான ராத்திரி, சிவனை அர்ச்சிக்கும் ராத்திரி, சிவனுக்கு இன்பமான ராத்திரி, என்று பலவகைப் பொருள்களைத் தரும். சிவமான ராத்திரி என்பதே இவைகளில் மிகப் பொருத்தமானது.*

*'மாசி மாத கிருஷ்ண சதுர்த்தசியில் நள்ளிரவில் சிவபெருமான் இலிங்கத்தில் தோன்றினார். இந்த நேரம் இரவு பன்னிரண்டு மணி தொடங்கி ஒன்றரை மணிவரையுள்ள காலமாகும். இக்காலம் இலிங்கோற்பவ காலம் என்று அழைக்கப்படும்.*

ஆதலால், இப்பொழுதும் அந்த இரவில் உலகிலுள்ள எல்லா இலிங்கங்களிலும் சிவன் தோன்றுகிறார்.

சிவராத்திரிக் கதை
ஆத்மஜோதி, ஆடி 1991

இந்த இரண்டு சிறிய பந்திகளில் எவ்வித ஆலாபரணங்களுமின்றி (1) சிவராத்திரி என்றால் என்ன (2) அது எப்பொழுது கொண்டாடப்படுகிறது (3) ஏன் கொண்டாடப்படுகிறது போன்ற வினாக்களுக்கு அளவான விளக்கங்களும் மேலதிகமாக 'இலிங்கோற்பவம்' என்ற சொல்லுக்குப் பொருளும் தரப்பட்டுள்ளன. கடைசி வசனம் மிகவும் முக்கியமானது. சமய நம்பிக்கை அதில் ஊன்றி விதைக்கப்பட்டிருக்கின்றது. 'ஆதலால் இப்பொழுதும் .... எல்லா இலிங்கங்களிலும் சிவன் தோன்றுகிறார்' என்ற இக் கருத்து இல்லையென்றால் கட்டுரை விளக்கம் உயிரற்ற தாகியிருக்கும்.

இவ்விதம் சொல்வதைத் தெளிவாகவும் அளவாகவும் அழுத்தமாகவும் எழுதும் பாங்கே ஆத்மஜோதி முத்தையா அவர்களின் தனிச் சிறப்பாகும்.

முத்தையா அவர்கள் எழுதிய நூல்கள் (அகர வரிசையில்) பின்வருமாறு:

1. இந்தோனேசியாவில் இரண்டு வருடங்கள்
2. இலங்கையிலே ஓர் இல்லற ஞானி
3. இளைஞர்க்கு ஏற்ற இந்தோனேசியக் கதைகள்
4. ஈழத்துச் சித்தர்கள்
5. ஏழாலை
6. கந்தனே கலியுகத்தில் கண்கண்ட தெய்வம்
7. சிவபால யோகேஸ்வரர்
8. தத்துவக் கதைகள்
9. தரிசனம்
10. திருமுறைக் காட்சி
11. திருமுறைச் செல்வம்
12. நிழலின் பின்னே மனிதன்
13. பன்னிரு மாத நினைவுகள்
14. மாணவருக்கு ஏற்ற மாண்புறு கதைகள்
15. முப்பெருஞ் சித்தர்

இவற்றுள் தத்துவக் கதைகள், ஏழாலை, ஈழத்துச் சித்தர்கள், கந்தனே கலியுகத்தில் கண்கண்ட தெய்வம் ஆகியவை இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற நூல்களாகும்.

எழுத்துக் கலையோடு இவரது பணிகளுக்குப் பக்கத் துணையாக இருந்த மற்றொரு சக்தி மிக்கச் சாதனம் இவரது பேச்சுக் கலை.

# 8

# பழுத்த பேச்சாளர்

முத்தையா அவர்கள் எழுதுவது போலவே பேசுவார். அதாவது, எளிய சொற்கள், சிறிய வசனங்கள், உதாரணங்கள், கருத்துத் தொடர்பு, தெளிவு, அழுத்தம் இவை எல்லாமே அவரது பேச்சில் இருக்கும்.

சொற்சிலம்பங்கள் ஆடுவதில்லை; சொற்களைத் தேடி அலைவதுமில்லை. தொனியை, வேகத்தைக் கூட்டுவதில்லை; தூங்க வைக்கின்ற தாலாட்டுமில்லை. சொல்ல வந்ததைச் சுருக்குவதில்லை; சுற்றிச் சுற்றி வளைப்பதுமில்லை. அளவை மீறிய மேற்கோள்கள் இல்லை; அரைத்த மாவையே அரைப்பதுமில்லை. அறிவைக் காட்டும் பகட்டுகள் இல்லை; அலுப்புத் தட்டிட அளப்பதுமில்லை.

சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்

என்பது வள்ளுவனார் வாக்கு.

முத்தையா அவர்கள் பயனுடைய பொருள்களைப் பேசிவருபவர். அவற்றைக் கேளாரும் வேட்ப மொழிபவர். எல்லாரும் புரியும்படி பேசுபவர். அதுவே அவரின் நோக்கமுமாகும். அதுவே அவரின் தனிச் சிறப்புமாகும். ஆறுதலாக, அமைதியாகவே பேசுவார். உரைசால் பொருள் உள்ளத்திற் பதியும் வண்ணம் பேசுவார். ஆழமான கருத்துக்களை அழுத்தமாக முன்வைக்கும் ஆற்றல் படைத்தவர் முத்தையா அவர்கள். மக்களுக்கு எதை எப்படிச் சொன்னால் புரியும் என்பதைப் புரிந்து கொண்டவர். அவர் பேசினால் எல்லோருக்கும் புரியும், புரியாதவருக்கும் புரியும். அவர் ஒரு பழுத்த பேச்சாளர்.

அவரது பேச்சில் எப்பொழுதும் நகைச்சுவை இருக்கும்.

எவருக்கும் குறிவைய்யாத, யாரையும் நோகச் செய்யாத பொதுவியல் நகைச் சுவையாக அவை அமையும்.

அவைகள் கனிகள். சுவைக்கச் சுவைக்க இனிக்கும் கனிகள்.. திருத்தமான விளக்கத்துக்குப் பொருத்தமான உதாரணங்கள் இன்றியமையாதவை. அவற்றையும் அளவோடு பயன்படுத்துவார். அவரது உதாரணங்கள் பெரிதும் கதைகளாக அமையும். இரண்டு மூன்று கதைகள் அவரது பேச்சிற் கட்டாயமாக இருக்கும். அவை பெரும் பாலும் அனுபவத்தோடு கலந்த கதைகளாக, படிப்பினைக் கதைகளாக இருப்பது வழக்கம்.

கதை சொல்லும் பழக்கமும் கேட்கும் பழக்கமும் மனிதன் பேசத்தொடங்கிய காலத்திலிருந்தே நடைபெற்றுவரும் ஒரு கலையாகும். ஒரு கருத்தை நேரடியாகச் சொல்வதிலும் ஒரு கதையாகச் சொல்வது சிறப்புடையது. ஏனெனில், கதை கேட்பதில் இயல்பாகவே எல்லாருக்கும் அதிக ஆர்வம் உள்ளது. வேதங்களிலும் பல தத்துவங்கள் கதைகள் மூலமே விளக்கப்பட்டிருக்கின்றன. புராண இதிகாசங்களும் சமய தத்துவங்கள், நீதி நெறிகள் என்பவற்றை விளக்க எழுந்தனவேயாகும். இந்த நோக்கத்துடனேயே முத்தையா அவர்களும் கதைகளைத் தமது பேச்சிலும் எழுத்திலும் அதிகம் பயன் படுத்தி வருகின்றார். பொதுவாகக் கதை என்றால் எல்லாருக்கும் விருப்பமான தொன்றெனினும், சின்னப் பிள்ளைகளுக்கே அதில் அதிக ஆர்வம் என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும். ஆர்வம் இருப்பினும் 'கதைகளை இனிமையாகச் சொல்லவும் வேண்டும்... பிஞ்சு நெஞ்சங்களிலே நல்லறிவுச் சுடர்களை ஏற்றவும் வேண்டும்' என்று தமது 'மாணவர்க்கேற்ற மாண்புறு கதைகள்' என்ற நூல் முன்னுரையிற் குறிப்பிடுகின்றார் முத்தையா அவர்கள்.

பிஞ்சு நெஞ்சங்களுக்கல்லாது பெரிய நெஞ்சங்களுக்கேற்பவும் அவர் கதை சொல்லவல்லவர். 1994ஆம் ஆண்டு யூலாய் மாதம் கனடாவில் நடைபெற்ற நான்காவது அனைத்துலகச் சைவ சித்தாந்த மகாநாட்டில், பெற்றோர்கள் எவ்விதம் பிள்ளைகளைப் பழுதாக்குகிறார்கள் என்பதை விளக்க ஒரு கதை சொன்னார்;

'ஒரு தகப்பன் தனது சிறிய மகனிடம், 'யாராவது வந்து என்னைக் கேட்டால் நான் இங்கு இல்லை, வெளியே போய்விட்டேன் என்று சொல்லு' எனச் சொல்லி விட்டு வீட்டுக்குள்ளேயே இருந்தார்.

சிறிது நேரம் கழித்து ஒருவர் வந்து தகப்பனை விசாரித்தார். மகன், தகப்பன் அங்கு இல்லை என்றும் வெளியே போய்விட்டதாகவும் சொன்னான். வந்தவர் எப்பொழுது திரும்பி வருவார் என்று கேட்டார். பையனுக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. உடனே. 'அப்பா எப்பொழுது வருவியள் எண்டு கேட்கிறார்' என்று உள்ளே இருந்த தகப்பனாரைக் கேட்டான்.'

'இவ்விதமே பெற்றாரே பொய் சொல்லும்படி சூது வாது அறியாத பிள்ளைகளைத் தூண்டுகிறார்கள்' என்று சொல்லி முடித்தார்.

ஆத்மஜோதி முத்தையாவை இந்துக்கள் எல்லாருமே பொதுவாக அறிவார்கள். அவரது சொற்பொழிவுகளைப் பலமுறை கேட்கும் வாய்ப்புக் கிடைக்காதவர் அவர் ஒரு சமயப் பேச்சாளர் என்ற கருத்தையே கொண்டிருக்கின்றனர். அது உண்மையே ஆயினும், அவர் சமயத்தை மட்டும் பேசிவருபவர் அல்லர் என்பது அவரது பேச்சை அடிக்கடி கேட்டின்புற்றவருக்கு நன்கு தெரியும்.

அவரது பேச்சுப் பொருள்கள், சமய தத்துவம், ஒழுக்கம் அல்லது நன்னெறி, சமூக சீர்திருத்தம், தருமம், தமிழ் மொழி, தமிழ் இலக்கியம், தமிழர் பண்பாடு என இடத்துக்கிடம் வேறுபடும். எதனைப் பேசினாலும் அதிற் சமயம் கலந்திருக்கும் என்பது உண்மையே. சமயம் மூலம் சமூக சீர்திருத்தங்களை ஏற்படுத்தலாம் என்பது அவரது அசைக்க முடியாத நம்பிக்கையாகும். மனிதனிடத்தில் மனிதன் தெய்வத்தைக் காணவேண்டும். அதற்கு அன்பு மிகவும் அவசியம். ஒருவரையொருவர் மதித்து அன்பு பாராட்டுகின்ற பொழுது சாதி வேற்றுமைகள் இல்லாமற் போகும், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைப் பெரிதுபடுத்தும் அசம்பாவிதங்களும் அழிந்து போகும் என்பது அவரின் தத்துவம்.

முத்தையா அவர்கள் பற்று மிகுந்த ஒரு துறவி எனில் மிகையாகாது. தெய்வப் பற்று, ஒழுக்கப்பற்று, தருமப் பற்று, சமூகப் பற்று, அனாதைப் பற்று, தமிழ்ப்பற்று, தமிழர் பற்று என்று பல பற்றுக்கள் அவரைப் பற்றிக்கொண்டுள்ளன.

இக்காலத்தில் அனாதைகள் பற்றியும் தமிழ் மொழியின் மேன்மைகள் பற்றியும் தமிழர் பண்பாட்டைக் காப்பாற்ற வேண்டியதன் அவசியம் பற்றியும் அவர் அதிகம் பேசிவருவதைக் காணக்கூடியதாக

இருக்கின்றது. தமிழ் ஈழத்தில் நடைபெற்றுவரும் போராட்டச் சூழ்நிலைகளாற் பலர் அனாதைகள் ஆவதைக் கண்டு கண்டு நொந்த அவரது உள்ளம் அனாதைகளைப் பற்றிப் பேச வைக்கின்றது. இந்தோனேசியாவில் தமிழ் பேசத்தெரியாத தமிழரைக் கண்டதன் பின் தமிழ் மொழியையும் தமிழர் பண்பாடுகளையும் பேணிப் பாதுகாக்க வேண்டியதன் முக்கியத்துவம்பற்றி வெளிநாடுகளில் வலியுறுத்த வேண்டியிருக்கின்றது.

முத்தையா அவர்கள் தேவை அறிந்து, அவை அறிந்து பேசவல்ல சிந்தனையாளர். குழந்தை அரங்கில் குழைந்து நிற்பார்; வளர்ந்தோர் அரங்கில் வளர்ந்து நிற்பார்; உலக அரங்கில் உயர்ந்து நிற்பார்.



உரை அரங்கில் சோதி சுவாமிகளுடன்

# 9

# அவையத்து அறிஞர்

முத்தையா அவர்கள் அனைத்துலக மட்டத்தில் நடைபெற்ற பல சமய, இலக்கிய மாநாடுகளிற் கலந்துகொண்டு கருத்துரைகள் வழங்கி ஈழத்து ஆறுமுக நாவலர் பரம்பரையினரின் அறிவுத் திறத்தை நிலைநாட்டி யிருக்கிறார்.

திருவண்ணாமலையில் ஆகஸ்ட் 15, 16, 17ஆந் திகதிகளில் வருடாவருடம் அருணகிரிநாதர் விழாக் கொண்டாடப்படுவது வழக்கம். 1948ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடந்த விழாவில் முத்தையா அவர்களும் கலந்து கொண்டனர். திருமுருக கிருபானந்தவாரியார், கி.வ. ஜெகந்நாதன் போன்ற பேரறிஞர் வீற்றிருந்த அவையிலே முத்தையா அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட நேரம் பதினைந்து நிமிடங்கள். 'ஓவியத்தில் அந்தம் அருள்வாயே' என்ற திருப்புகழ் அடியைப் பொருளாகக் கொண்டு அரியதொரு சொற்பொழிவை அழகான யாழ்ப்பாணத் தமிழில் நிகழ்த்தினார். விழாமுடிவில் கிருபானந்தவாரியார் பொன்னாடை போர்த்தி முத்தையா அவர்களைக் கௌரவித்தார்.

1954ஆம் ஆண்டு வினோபாவே புத்தகாயாவில் நடத்திய சர்வோதய மாநாட்டுக்கு இலங்கைப் பிரதிநிதியாகச் சென்றிருக்கின்றார். கங்கைக் கரையில் உள்ள புத்தகாயா பட்டினம் புத்தபிரான் ஞானம் பெற்ற புண்ணிய தலமாகும்.

1965ஆம் ஆண்டில் அறிஞர் சா. கணேசன் அவர்கள் செட்டிநாட்டு நாட்டரசங் கோட்டையில் உள்ள அம்பிகை கோயிலில் கம்பர் விழாவை முதன்முதலாக நடத்தினார். அந்த விழாவுக்கு கொழும்பில் இருந்த இராஜாராம் செட்டியார் அவர்களின் முயற்சியால் முத்தையா அவர்களும் சென்றிருந்தார்கள்.

1979ஆம் ஆண்டு மகான் சங்கராச்சாரியார் நடத்திய அகில

உலக இந்து சமய மாநாட்டிற் பங்கு பற்றிய இலங்கைப் பிரதிநிதிகள் குழுவுக்குத் தலைவராக முத்தையா அவர்கள் சென்றனர்.

இதே மாநாடு 1980ஆம் ஆண்டு மலேசியாவில் நடைபெற்ற போதும் அதிற் கலந்து கொண்ட இலங்கை அறிஞர் குழுவுக்கு இவர் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். இந்த மாநாட்டிற் பசுவதையை நிறுத்துவது பற்றி உரைநிகழ்த்த முத்தையா அவர்கள் திட்டமிட்டிருந்தார்கள். இஸ்லாமிய நாடாகிய மலேசியாவில் பசுவதை பற்றிப் பேசுவது நகைப்புக்கிடமாகும் எனச் சிலர் கருத்துத் தெரிவித்தனர். முத்தையா அவர்கள் பேசவிருந்த தினத்தில் மலேசிய அரசின் உதவிப் பிரதமரே தலைமை வகிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அவர் தலைமையில் பசுவதையை நிறுத்தும் தீர்மானத்தை முன்வைத்தல் என்பது மிகவும் கடினமான காரியம். மிகுந்த அவதானத்தோடும் புத்தி சாதுரியத்தோடும் முத்தையா பேசினார். பேச்சோட்டம் பின்வருமாறு இருந்தது.

> 'ஒரு பசு உயிரோடு வாழ்ந்தால் 1000 பேருக்குப் பால் கொடுக்கும். அது கொல்லப்பட்டால் 25 பேருக்கு உணவாகும். சமய ரீதியில் அல்லாது போனாலும் பொருளாதார நன்மை கருதியாவது பசுவதை நிறுத்தப்படல் வேண்டும்.'

முத்தையா அவர்களின் தீர்மானத்தில் நியாயம் இருக்கிறதெனப் பாராட்டிப் பேசினார் உதவிப் பிரதமர். அவையோர் கைதட்டி ஆமோதித்தனர்.

இம் மாநாட்டிற் பெற்ற மதிப்புக் காரணமாக மலேசியாவின் பல பகுதிகளிலிருந்தும் சொற்பொழிவாற்றக் கேட்டு முத்தையா அவர்களுக்கு அழைப்புகள் கிடைத்தன. செந்நூர் முருகன் கோயிலில் கந்தர் அனுபூதி பற்றிப் பத்து நாட்கள் தொடர்ந்து உரை நிகழ்த்தினார். ஒலிப்பதிவு செய்யப்பட்ட அவரது உரைகள் இன்றும் கோயிலிற் பேணிவைக்கப்பட்டு அவ்வப்போது பயன்படுத்தப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

பத்துமலை என்னும் இடத்தில் தைப்பூச விழாவில் இருமுறை சொற்பொழிவாற்றினார். பத்துமலையிலுள்ள சிவானந்தாச்சிரமத்தில் பிரணவானந்த சுவாமிகள் தலைமையில் அந்தர் யோகப் பயிற்சி

வகுப்புகளையும் நடத்தினார்.

மலேசியாவில் தமிழர் வாழுகின்ற தோட்டப் பகுதிகள் பலவற்றைச் சுற்றிப் பார்வையிட்டார். தோட்டப் பகுதிகளில் தமிழும் சைவமும் நன்கு பேணப்படுவதையிட்டு மகிழ்ச்சியுற்ற முத்தையா அவர்கள் நகரப்புறத்துத் தமிழர் ஆங்கில நாகரிகத்துக்கு அடிமையாகி வருவது குறித்துக் கவலையும் தெரிவித்தார்.

பினாங் பல்கலைக் கழக இந்து மாணவரும் முத்தையா அவர்களை அழைத்திருந்தனர். 'உபநிஷத்துக்கள்' என்னும் பொருளில் அவர்களுக்கு உரை நிகழ்த்தினார்.

மலேசியச் சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு சிங்கப்பூருக்குச் சென்றார். சிங்கப்பூரில் இவர் முதன்முதலாக உரைநிகழ்த்திய திருவிடம் செண்பக விநாயகர் ஆலயமாகும். சிலோன் வீதியில் அமைந்துள்ள இவ் வாலயம் யாழ்ப்பாணத்தவரால் நடத்தப்படுவதால் வழிபாட்டு முறைகளும் யாழ்ப்பாணத்து மரபிலேயே நடைபெற்று வருகின்றன.

முத்தையா அவர்களை அன்புடன் அழைத்திருந்த மற்றுமொரு நாடு இந்தோனேசியாவாகும்.



வீட்டுப் பிரார்த்தனை

# 10

# இந்தோனேசியத் தீபம்

**1980**ஆம் ஆண்டு மலேசியாவில் நடைபெற்ற அகில உலக இந்து சமய மகாநாட்டில் முத்தையா அவர்கள் கலந்துகொள்ளச் சென்றபோது, அங்கு வருகை தந்திருந்த இந்தோனேசியப் பிரதிநிதிகள் அவரை இந்தோனேசியாவுக்கு அழைத்திருந்தனர். அதனைத் தொடர்ந்து முத்தையா அவர்களின் சமயப் பணிகள் அங்கும் தொடரலாயின.

இந்தோனேசியா ஆசியாக் கண்டத்துக்குத் தென்கிழக்கில் அமைந்திருக்கின்றது. 13 677 தீவுகளைக் கொண்டு உலகத்திலேயே மிகப் பெரிய தீவு நாடாக விளங்குகின்றது. சுமாத்திரா, யாவா, தென் போர்ணியோ, செலிபசு, உலொம்போக்கு, பாலி, சுலவேசி, திமோர், மேற்கு கினியா முதலியன பிரதான தீவுகள். யாவாத் தீவில் உள்ள யக்கர்த்தா இந்தோனேசியாவின் தலைநகரம்.

குடித்தொகை 18 கோடி. உலகத்திலேயே ஐந்தாவது மிகப் பெரிய நாடும் ஆகக்கூடிய இஸ்லாமியரைக் கொண்ட நாடும் இதுவேயாகும். குடித்தொகையில் 88 சதவீதம் இஸ்லாமியர். 2 வீதம் இந்துக்கள். ஏனையோர் கிறித்தவர்களும் புத்த சமயத்தவர்களுமாவர்.

கி.மு. முதலாம் நூற்றாண்டுக்கு முன்னதாகவே இந்து கலாச்சாரம் இங்கு பரவி இருந்தது. பின்னர் புத்த சமயமும் பரவத் தொடங்கியது. 14ஆம் நூற்றாண்டு அளவில் வட இந்தியாவிலிருந்து வந்த முஸ்லிம் வியாபாரிகள் இஸ்லாமிய சமயத்தைப் புகுத்தினர். அதனைத் தொடர்ந்து, இஸ்லாம் வேகமாகப் பரவத் தொடங்கி இன்று உலகத்திலேயே மிகப் பெரிய இஸ்லாமிய நாடாக இந்தோனேசியா விளங்குகின்றது.

எனினும், பாலித் தீவு முழு இந்து சமயத் தீவாக இன்றும் திகழ்கின்றது. இங்கு வாழுகின்ற ஒன்றரைக் கோடி மக்களும்

இந்துக்கள். இவர்கள் பேசும் மொழி இந்தோனேசிய மொழி. இதற்கு பகாசா (Bahasa) என்று பெயர். உலகத்தில் உள்ள இந்து சமய நாடுகளிற் காணப்படாத ஒரு விசேடம் பாலித் தீவிற் காணப்படுகின்றது. இங்கு எவரும் எவ்வித குற்றங்களும் செய்வதில்லை. பொய் என்றால் என்ன என்று பாலி மக்களுக்குத் தெரியாது. உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை. சுருக்கமாகக் கூறின் பஞ்சமா பாதகங்களுக்கு இங்கு இடமில்லை. மறியற் சாலைகள் இருக்கின்றன. ஆனால் அங்கு ஒருவரேனும் இல்லை என்று கூறுகின்றார் முத்தையா அவர்கள்.

கனிவளங்கள், கைத்தொழில்கள் என்பன இருப்பினும், இந்தோனேசிய மக்களின் பிரதான தொழில் பயிர்ச்செய்கை. நெல், சோளம், மரவள்ளி, வத்தாலை, சோயா அவரை, கரும்பு, வாழை, இரப்பர் தேயிலை, கோப்பி முதலிய பயிர்ச்செய்கையுடன் தென்னையும் வளர்க்கப்படுகின்றது.

19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் கரும்பு, புகையிலை போன்ற வணிகப் பயிர்த்தோட்டங்களில் வேலை செய்விப்பதற்காக இடச்சுக் கிழக்கிந்தியக் கம்பனியார் இந்தியாவிலிருந்து தமிழர்களை இந்தோனேசியத் தீவுகளுக்குக் கொண்டுசென்றனர்.

இன்று சுமாத்திராவில் மட்டும் 4000 தமிழ்க் குடும்பங்கள் வாழ்கின்றன. இவர்களுட் பெரும் பாலானோர் மேடான் நகரத்தைச் சுற்றியுள்ளனர். மேடான் சுமாத்திராவின் தலைநகரமாகும்.

மேடான் நகரத்தில் மாரியம்மன், தண்டபாணி, காளியம்மன் ஆகிய கோயில்கள் இருக்கின்றன. மாரியம்மன் கோயில் மிகவும் பெரியது. இவற்றைத் தவிர, மேடான் சுற்றுப் புறத்தில் 41 சிறிய கோயில்கள் உள்ளன. எல்லாக் கோயில்களையும் பெரிய கோயிலாகிய மாரியம்மன் கோயிலே நிர்வகித்து வருகின்றது.

மேடான் நகரத்தில் முத்தையா அவர்களை வரவேற்க ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்தில், சுமாத்திராவில் எத்தகைய சமயப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது பற்றி ஒரு கலந்துரையாடல் இடம்பெற்றது. கோயில்கள் பல இருந்தும் பலர் கோயிலுக்குச் செல்வதில்லை என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டது. முத்தையா அவர்கள், மனிதன் கோயிலைத் தேடிச் சென்ற காலம் போய்விட்டது.

இனி, கோயில் மனிதனைத் தேடிப் போக வேண்டும்' என்ற கருத்தை முன்வைத்தார்.

அதனை மேலும் விளக்கி, கோயில் நிர்வாகம் சமூகப் பணிகள் செய்ய வேண்டிய அவசியத்தை வலியுறுத்திப் பேசினார்.

இதன் விளைவாக, மாரியம்மன் கோயில் நிர்வாக சபையினர் தீவிர சமூகநலப் பணிகளில் ஈடுபடலாயினர். கலியாண மண்டபம் ஒன்று கட்டப்பட்டு ஏழைகள் இலவசமாகத் திருமண வைபவங்களை நடத்த வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. மாரியம்மன் கோயிலிலேயே திருமணப் பதிவுக்கான ஒழுங்கும் செய்யப்பட்டிருக்கின்றது. கோயில் நிர்வாகம் இலவச வைத்திய, நூல்நிலைய சேவைகளையும் செய்து வருகின்றது. இரண்டு பிரேத வண்டில்களையும் கோயில் வாங்கிவிட்டிருக்கின்றது. இத்தகைய சேவைகளை முன்னிட்டு மக்கள் அடிக்கடி கோயிலுக்குப் போக வேண்டிய ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது. கோயிலுக்கும் மக்களுக்கும் இடையில் சுமுகமான உறவு வளர்ந்து வருகின்றது.

இந்தோனேசியாவில் தமிழரோடு பாடான், அச்சை, வத்தை, காரோ, சீனர் என்போரும் சிறுபான்மை இனத்தவராக உள்ளனர். பாடான்காரர் தம் இனத்தவரைக் கண்டால் பாடான் மொழியிலேயே பேசுவர். அதுபோலவே மற்றைய சிறுபான்மை இனத்தவரும் தத்தம் மொழிகளில் பேசிவருகின்றனர். சீனருக்குப் பல இடங்களிற் பள்ளிக் கூடங்களே இல்லை. இருப்பினும், சீன மொழி வழங்கிவருகின்றது. வளர்ந்து வருகின்றது. ஆனால் தமிழர் தமிழரைக் கண்டாலும் இந்தோனேசிய மொழியிலேயே பேசிவருகின்றனர். இதனால் தமிழ் வளர்ச்சியடையா திருக்கின்றது. இந்தோனேசியத் தமிழர்களில் வயோதிபருக்குத் தமிழ் பேசத் தெரியும். வாலிபர்களுக்குத் தமிழ் பேசத் தெரியாது; ஆனால் பிறர் பேசினால் விளங்கும். சிறுவர்களுக்குப் பேசவும் தெரியாது; பிறர் பேசினாலும் விளங்காது. அதனால், சமய அறிவும் அவர்களுக்குக் குறைவாகவே இருக்கின்றது.

இந் நிலைமைகளை நன்கு அறிந்த முத்தையா அவர்கள் ஆறு சமயப் பள்ளிகளை அங்குள்ள ஆர்வலர்களின் உதவியுடன் தோற்றுவித்தார். பூபால்கந்தை, அவுரி, மேடான், பசுண்டால் ஆகிய இடங்களில் அப் பள்ளிகள் அமைக்கப்பெற்றன. ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் இவ்விரு ஆசிரியர்களாக ஓரளவு தமிழ் பேசத்

தெரிந்த பன்னிரண்டு ஆசிரியர்கள் கற்பித்தற் பொறுப்புகளை ஏற்றனர். இவர்களுக்குக் கற்பித்தல் முறை, இந்து சமயம், தமிழ் மொழி ஆகிய பாடங்களில் முத்தையா அவர்கள் பயிற்சி அளித்தார்கள்.

1984 – 1986ஆம் ஆண்டுகளில் இந்தோனேசியாவில் முத்தையா அவர்கள் தங்கியிருந்து தம்மால் ஆரம்பித்து வைக்கப்பெற்ற சமயப் பள்ளிகளின் வளர்ச்சிக்கும் மக்களின் ஆன்மீக நன்மைப்பாடுகளுக்கும் அயராது உழைக்கலாயினர். வழக்கம் போலப் பஜனைகளுக்கு முக்கியத்துவம் அளித்தார். இவ்வழிபாட்டை (1) குடும்பப் பிரார்த்தனை (2) வீட்டுப் பிரார்த்தனை (3) கூட்டுப் பிரார்த்தனை என மூவகையாக நடத்தி வந்தார்.

குடும்பப் பிரார்த்தனை இராப் போசனத்துக்குமுன் குடும்ப உறுப்பினர்கள் நாளாந்தம் செய்வது. வீட்டுப் பிரார்த்தனை என்பது 15–20 வீடுகள் ஒன்று சேர்ந்து வாரத்துக்கு ஒரு முறை நடத்துவது. கூட்டுப் பிரார்த்தனை வெள்ளிக்கிழமைதோறும் கோயில்களில் நிகழ்த்துவது. மேலதிக விபரங்களை முத்தையா அவர்கள் எழுதிய 'இந்தோனேசியாவில் இரண்டு வருடங்கள்' என்ற நூலிற் கண்டறியலாம்.

இந்தோனேசியாவில் முத்தையா அவர்களின் சமய, சமூக தமிழ் மொழிப் பணிகள் தொடர்ந்தும் நடைபெற்றுவருகின்றன. தாம் ஏற்றிவைத்த தீபம் அணையாது தொடர்ந்து ஒளிபரப்ப அவர் அவ்வப்போது அங்கு செல்லவேண்டியிருக்கின்றது.

இந்தோனேசியாவில் முத்தையா அவர்கள் ஒரு சுவாமி.

# 11

# காலத்துக்கேற்ற சுவாமி

இந்தோனேசிய இந்துக்கள் திரு. முத்தையா அவர்களைச் சுவாமி என அழைக்கிறார்கள். அவரது தரிசனத்துக்காக வரிசையில் நிற்கிறார்கள். அவரின் பாதங்கள் தமது வீடுகளிற் படுதலைப் பெரும் பேறாகக் கருதுகிறார்கள். அவரது பத்மாசனக் கோலப் படத்தைத் தமது வீடுகளில் வைத்துப் போற்றுகிறார்கள். பெரும்பாலான வீடுகளில் அவரது பேச்சுக்களையும் பஜனைகளையும் ஒலிப்பதிவு செய்து வைத்திருக்கிறார்கள். அவரின் போதனைகளை வேத வாக்காக மதிக்கிறார்கள்.

கனடாவுக்கு அவர் வருகை தந்திருந்த பொழுதும் பலர் அவரைச் சுவாமிகள், சுவாமிகள் என விழித்துப் பேசியதையும் பாதங்களில் விழுந்து வணங்கியதையும் பார்க்கக்கூடியதாக இருந்தது.

இத்தனைக்கும் ஞானசுரபி முத்தையா அவர்கள் சுவாமிப் பட்டம் தரிக்காதவர்; காவியுடையோ கண்டிகையோ அணியாதவர்;. கபாலமோ கமண்டலமோ தாங்காதவர்; தாடியோ மீசையோ வளர்க்காதவர். அப்படி இருந்தும் மக்கள் அவரைச் சுவாமியாக மதிக்கின்றனர்; வணங்குகின்றனர்.

முத்தையா அவர்கள் காவியுடையை ஏன் அணிவதில்லை? இது தொடர்பாக நடந்த ஓர் உரையாடலில் அவர் தமது சீடர் திரு. சிவ முத்துலிங்கம் அவர்களுக்கு அளித்த விளக்கம் பின்வருமாறு:

'காவியுடை அணிந்தால் மக்கள் மேலான சுவாமி என எண்ணுவார்கள். அத்தகைய எண்ணம் மக்களிடமிருந்து என்னைப் பிரித்துவிடும். மக்களுடன் சேர்ந்து அவர்களது குறைநிறைகளை நேரிற் கண்டறிய முடியாது. மக்களின் குறைநிறைகளைச் செவ்வனே அறியாமல் அவர்களுக்குச் சேவை செய்ய முடியாது. மேலும்,



காவியுடைதரித்த சந்நியாசி மக்கள் வீடுகளில் தங்கலாகாது. மக்களுடன் உறவாடி மக்களுக்குச் சேவை செய்வதையே மகத்தான சேவையாக, மகேஸ்வரன் சேவையாக யான் கருதுவதால் காவியுடைகளை அணிவதில்லை. யோகர் சுவாமிகள், இராமகிருஷ்ணர் ஆகியோரும் காவியுடைகளை அணியவில்லை. உண்மையான அணி, உயர்வான பணியாகும்.'

ஆம். உயர்வான பணிக்கு வேடங்கள் முக்கியமல்ல.

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்

என்பது திருவள்ளுவர் தத்துவம். எனின், திருவள்ளுவர் இதனைக் கூறுவதற்கு மற்றொரு காரணமும் இருக்கவே செய்கின்றது. உலகம் பழிப்பனவற்றை ஒழியாது, அவற்றை வேடங்களால் மறைக்க முயன்ற போலித் துறவிகள் அவர் காலத்திலும் இருந்திருக்கின்றார்கள்.

இக்காலத்திலும், வேடங்களை நம்பி ஏமாந்த அனுபவங்கள் இந்துக்களுக்கு நிறையவே இருக்கின்றன. தவ வேடங்கள்தாம் வேடங்கள் என்றில்லை. உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுகின்றவர்களும் நல்லவர்கள் போல நடித்துக் கேடுகள் செய்கின்றவர்களும் வேடதாரிகளே.

உண்மைத் தொண்டர் பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்; பாரம் ஈசன் பணியல்ல தொன்றிலார்; ஈர அன்பினர்; யாதுங் குறைவிலார். திருத்தொண்டருக்குரிய இவ்வியல்புகளை முத்தையா அவர்களிடம் மக்கள் காண்கின்றனர். சாதாரணமாக, மற்றவர்களிடம் காணமுடியாத இவ்வியல்புகளை அவரிடம் காண்கையில் அவர்மீது அளவற்ற பக்தி மக்களுக்கு உண்டாவது இயல்பு. இவ்வித மக்கள் பக்தியே அவரைச் சுவாமி நிலைக்கு உயர்த்தியிருக்கின்றது.

மேலும், முத்தையா அவர்களுடைய அழகான தோற்றமும் புன்முறுவல் பூத்த முகமும் கருணைமிகு பார்வையும் அன்பு பாராட்டும் பண்பும் ஆதரித்தணைக்கும் ஆர்வமும் அதிர்வறியா அடக்கமும் அமைதிமிகு சாந்தமும் காந்தம் போல மக்களைக் கவர்கின்றன. காணக் கிடையாக் கடவுளை அவர் வடிவத்திற் கண்டின்புறுகின்றனர். முத்தையா அவர்கள் மக்களிற் கடவுளைக்

காண்கின்றார். மக்கள் முத்தையாவிற் கடவுளைக் காண்கின்றனர்.

ஆசிரியராகத் தொழில் பார்த்த வகையாலும் சமய போதனைகள், சொற்பொழிவுகள் நிகழ்த்துவதனாலும் பஜனைகள் செய்வதனாலும் முத்தையா அவர்களுக்குச் சீடர்கள் அதிகம். சீடர்கள் இவரைக் குருவெனப் போற்றிக் கும்பிடுகின்றனர்.

ஆனால், முத்தையா அவர்களுக்கு அன்பர்கள் இவ்விதமெல்லாம் தம்மை உயர்த்திப் பேசுவதும் மதிப்பதும் பிடிக்காத விடயம். அவர் எப்பொழுதும் தம்மை ஒரு மக்கள் சேவகனாகவே, அடியவனாகவே கருதி மிகுந்த அடக்கத்தோடு தமது பணிகளைச் செய்து வருகின்றார். மணிவாசகப் பெருமான் தம்மை 'நாயேன்' என்று கூறிக் குழைந்தார். சுந்தரர் தாமோர் 'அடியார்க்கும் அடியேன்' என்று பாடிப் பணிந்தார். முத்தையா அவர்களும் தம்மை 'அடியேன் அடியேன்' என்றே எப்பொழுதும் குறிப்பிடுவார். 'பணியுமாம் என்றும் பெருமை' என்றார் வள்ளுவர் பெருமான்.

எனினும். அன்பர்களுக்கு அவர் ஒரு சுவாமி. சுவாமிப் பட்டம் தரியாத சுவாமி, காவியுடை தரியாத காலத்துக்கேற்ற சுவாமி. தம்மளவில் ஒரு யோகி; அந்தர் யோகி.



அன்பர்களுக்கு ஆசி வழங்குதல்

# 12

# அந்தர் யோகர்

திரு. நா. முத்தையா அவர்கள் ஓர் அந்தர் யோகர். அந்தர் யோகத்தைச் செய்து வருபவர் அந்தர் யோகர் எனப்படுவர்.

அந்தர் யோகம் என்றால் அந்தக்கரணங்களைச் சுத்திசெய்தற்கான தியானப் பயிற்சி என்று பொருள். அந்தர் என்பது உள்ளே என்னும் பொருளுடையது. இது உட்கருவிகளாகிய மனம், புத்தி சித்தம், அகங்காரம் ஆகியவற்றைக் குறிக்கும்.

யோகம் என்பது சாதனம். சாதனம் என்றால் இடைவிடாத பயிற்சி என்று பொருள். அந்தர் யோகத்தில் இது ஆழ்ந்த தியானத்தை அல்லது நிட்டையைக் குறிக்கும். நிட்டை என்றதும் பலர் பயந்துவிடக் கூடும். இவ்விதம் பயப்படத்தக்க வார்த்தைப் பிரயோகங்களை முத்தையா அவர்கள் சமயத்தில் பயன்படுத்துவதே இல்லை. சமயத்தில் தனக்குள்ள பாண்டித்தியத்தைக் காட்டுவது என்றைக்கும் அவரது நோக்கமாக இருந்ததில்லை. சாதாரண மக்களும் இலகுவில் விளங்கும் வண்ணம் எதையும் எளிமையாகச் சொல்வது அவரது இயல்பு.

அந்தர் யோகம் பற்றி அவர் அளிக்கும் விளக்கம் பின்வருமாறு:

'அந்தர் என்றால் உள்ளே அல்லது உள்முகம் என்பது பொருள். யோகம் என்றால் ஒன்றிப்பு அல்லது வாழ்வு என்பது பொருள். அக வாழ்வின் பிரதிபலிப்பு அல்லது அகவாழ்வுக்கான சாதனை என்பது பொருள்.

'மனிதன் வாரத்தில் ஒருநாளைக்காவது உலகத்தினின்று விலகித் தனித்து வாழ வேண்டும் என்று இராமகிருஷ்ண பரமஹம்ச



தேவர் கூறுகின்றார். அத்தகையதொரு தனித்த வாழ்வே அந்தர் யோக வாழ்வாகும்.

'கப்பல் கடலிலே செல்லலாம். கடல் கப்பலுக்குள்ளே செல்லக்கூடாது. சென்றால் கப்பல் கடலுக்குள்ளே ஆழ்ந்துவிடும். இதுபோல மனிதன் உலகத்திலே வாழலாம். உலகம் மனிதனுக்குள்ளே வாழக்கூடாது. மனிதனுக்குள்ளே உலகம் வாழ்ந்தால், அவனும் கடல் புகுந்த கப்பல் போல சம்சார சாகரத்துள்ளே ஆழ்ந்து விடுவான்.

'மனிதன் உலகத்தில் வாழ்ந்துகொண்டே சம்சார சாகரத்துள் ஆழ்ந்து போகாமல் வாழ்வதற்கு வழிகாட்டுவதுதான் அந்தர் யோக சாதனையாகும். பெயரைக் கண்டு யாரும் பயப்படத் தேவையில்லை.'

ஈழத்திலே முதன்முதலாக அந்தர் யோகம் 1948ஆம் ஆண்டு திருக்கேதீஸ்வரத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. பாரதத்திலிருந்து வந்த பித்துக்குளி முருகதாஸ், பௌராணிகர் சுகப்பிரமம், பாலயோகி இராமதாஸ் ஆகியோர் வகுப்புகளை நடத்தினர். இப் பயிற்சிகளில் ஆர்வத்துடன் பங்கு பற்றியவர்களில் முத்தையா அவர்களும் ஒருவர்.

பிரார்த்தனை, நாமஜெபம், இஷ்டமூர்த்தி உபாசனை, நாடி சுத்தி, தியானம், அந்தர் யோக விளக்கம், தோத்திர பாராயணம், ஐயம் தெளிதல் போன்ற பயிற்சிகள் தொடர்ந்து ஏழு நாட்கள் நடைபெற்றன. பயிற்சி முடிவில் பங்குபற்றியவர்கள் ஒவ்வொருவரும் எல்லோர் முன்னிலையிலும் ஒரு வாக்குறுதி எடுத்தல் வேண்டும். அந்த வாக்குறுதியைத் தவறாது பின்னர் நிறைவேற்றவும் வேண்டும். அது அந்தர் யோகத்தின் பிரயோக நிலைகளுள் ஒன்றாகும்.

எல்லோரும் தம்மால் செய்து முடிக்கக்கூடிய வாக்குறுதிகளை எடுத்தனர். முத்தையா அவர்களின் முறை வந்தபோது அவர் தம்மை அறியாமலே, 'நான் நித்திய பிரமசாரியாக வாழ்வேனென உறுதி அளிக்கின்றேன்' என்றார். முத்தையா அவர்களுக்கு அப்பொழுது வயது 30. அழகான ஓர் ஆண்பிள்ளை திருமணஞ் செய்து கொள்ளும் வயதில் இப்படி ஒரு வாக்குறுதியை எடுப்பர் என திருக்கேதீஸ்வரத்தில் அந்தர் யோகப் பயிற்சிகளிற் பங்குபற்றியவர்களோ இந்தியாவிலிருந்து பயிற்சிகளை நடத்த வந்த யோகிகளோ சற்றும் எதிர் பார்க்கவில்லை. முத்தையா அவர்கள் அன்றே தமது கருமத்தை நிர்ணயித்துக் கொண்டார்கள். தெய்வ சித்தம் இருந்தவாறு.

அந்தர் யோகத்தை அவ்வப்போது செய்து, அதனால் தமது ஆத்மாவுக்கு நன்மை காண்பதோடு மட்டும் முத்தையா அவர்கள் நின்றுவிடவில்லை. ஏனைய ஆன்மாக்களும் ஈடேற்றம் பெறவேண்டும் என்கின்ற பக்குவ நோக்குடன் 1948ஆம் ஆண்டிலேயே நாவலப்பிட்டியில் அந்தர் யோக வகுப்புக்களை நடத்தினார். அதனைத் தொடர்ந்து சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் மலைநாட்டின் பிரதான நகரங்களிலும் வகுப்புகள் ஒழுங்குசெய்யப்பட்டன.

பாடசாலை விடுமுறைகளில் கொழும்பு, மட்டக்களப்பு, வவுனியா, திருகோணமலை ஆகிய இடங்களிலும் யாழ்ப்பாணக் குடநாட்டின் பல பகுதிகளிலும் விரும்பியவர்களை அவ்வப்போது அந்தர் யோகத்தில் ஈடுபடுத்தி வந்திருக்கின்றார். ஆசிரியத் தொழிலிலிருந்து ஓய்வு பெற்றபின் அந்தர் யோகத்தை நடத்துதல் அவரது சமயப் பணிகளுள் முக்கியமான தொன்றாகிவிட்டது.

வெளிநாடுகளிலும் அந்தர் யோகத்தை இவர் அறிமுகப்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. இந்தோனேசியாவில் சுமாத்திராவின் தலைநகரான மேடானில் உள்ள மாரியம்மன் கோயிலில் அந்தர் யோகத்தை முதன்முதலாக அறிமுகப்படுத்தினார். மலேசியா, சிங்கப்பூர் கனடா ஆகிய நாடுகளிலும் அந்தர் யோக வகுப்புக்களை நடத்தியிருக்கின்றார்.

யோக நிலையிற் பல மகான்கள் இறைதரிசனம் பெற்றிருக்கிறார்கள்.

# 13

# மகான்களைக் கண்ட மகான்

யோகத்தின் அடுத்த படி ஞானம். ஞானம் என்பது அறிவு முதிர்ந்து கனிந்திருக்கும் நிலை. சமயத்தில் இதற்கு மெய்யறிவு அல்லது முக்காலத்தையும் உணரும் திறன் என்று பொருள். ஞானம் பலவகைப்படுமாயினும் பரஞானமே மேலான ஞானமென்பது இந்து சமய தத்துவம். பரம்பொருளை சகளமும் நிட்களமும் கடந்த உருவில் அறிவு முறைகளைக் கொண்டு வணங்குதல் ஞானவழிபாடு எனப்படும். ஞானநெறி முத்தி எய்தற்குரிய மேலான பாதமாகும்.

ஞானம் வெறும் நூற் படிப்பினால் வருவதொன்றல்ல. அது, பொய்தான் தவிர்த்துப் புலனடக்கி மெய்தான் உணர்ந்த குருவினால் வரவேண்டியது. குருமார்களுக்கெல்லாம் குருவானவன் இறைவன். 'குருமணி' என்பது மணிவாசகப் பெருமான் சிவபெருமானுக்குக் கொடுத்த பட்டம். காரணம், அவனே வாலறிவன்; மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடர்; ஞானிகளுக்கு ஞானத்தை வழங்கும் ஞான சூரியன்.

இறைவன் பக்குவம் பெற்ற ஆன்மாக்களைக் குருவடிவாகி வந்து ஆட்கொள்ளுந் தன்மையன். இங்கு பக்குவமாவது குருவைக் காணத் தயாராக இருக்கும் தகைமை. இத்தகைமையை வளர்க்க உதவுவது சத்சங்கம்.

சத்சங்கம் என்பது மெய்யன்பர் கூட்டம். சத் – உண்மை; சங்கம் – அன்பர் கூட்டம். சத்சங்கத்துக்கு மற்றொரு பெயர் சங்கமம். இது சிவனடியார் திருக்கூட்டதைச் சிறப்பாகக் குறித்து நிற்கும். சிவனடியார்களின் மகிமையைப் பெரிய புராணம் சிறப்பித்துக் கூறும். குரு இலிங்க சங்கம வழிபாடுகள் மூன்றும் இறைதரிசனத்துக்கு இட்டுச் செல்லும் வழிமுறைகளாம்.

சத்சங்கம் இருவகைப்படும். பெரியார் ஒருவரைச் சந்தித்து

உரையாடுதல் நேர்முக சத்சங்கம் என்றும் அவரைக் காணமுடியாதவிடத்து, அவரது நூல்களைப் படித்து அவை வழியாக அவருடன் உறவாடி, அவருடன் இணங்கி இருத்தல் மறைமுக சத்சங்கம் என்றும் கூறப்படும்.

முத்தையா அவர்கள் பிறந்த நாட்டிலுள்ள திருக்கூட்டத்தவரோடு இணங்கி இருந்த தன்மையினாலும் தனிப்பட்ட யாத்திரைகளினாலும் சர்வதேச மகாநாடுகளிற் கலந்துகொண்ட வகையாலும் கிடைக்கப்பெற்ற பல மகான்களின் தரிசனங்களாலும் 'மகாத்மா' நிலையை எய்தியிருப்பது அவர்களது சொற்களாலும் செயல்களாலும் வெளிப்படையாகத் தெரியக் கூடியதாக இருக்கின்றது.

ஈழநாட்டில் சைவம் தழைக்கத் தளராது உழைத்த சுவாமி ஞானப்பிரகாசர், ஆறுமுக நாவலர் பெருமான், அவரது மாணாக்கர் காசிவாசி செந்திநாதையர், நீர்வேலிச் சங்கர பண்டிதர், சேர் பொன் இராமநாதன், மேலைப்புலோலி நா. கதிரைவேற்பிள்ளை ஆகியோரின் வரலாறுகள் முத்தையா அவர்களுக்கு மறைமுக சத்சங்கமாயின.

சடைவரதர், செல்லாச்சி அம்மையார், மகாதேவ சுவாமிகள், யோகர் சுவாமிகள், சித்தானைக்குட்டிச் சுவாமிகள் போன்ற ஞானிகளின் தரிசனங்களும், விபுலானந்த அடிகளார், ஸ்ரீ த. கைலாசபிள்ளை, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, திரு. சு. சிவபாதசுந்தரம் ஆகிய சிந்தனா மேதைகளின் செல்வாக்கும், துர்க்காதுரந்தரி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி முதலாகப் பலவகைச் சமயப் பணிகளில் ஈடுபட்டுவரும் திருத்தொண்டர் கூட்டத்தோடு இணங்கி இருக்கும் சிறப்பும் பெற்றவர் முத்தையா அவர்கள்.

1945ல் பகவான் இரமண மகரிஷியினதும் 1948ல் பகவான் அரவிந்தரினதும் தரிசனங்கள் கிடைத்தமையை இன்றும் பத்திபரவசத்துடன் அவர் நினைவு கூருகின்றார். சுவாமி சுத்தானந்த பாரதியார், பகவான் சத்ய சாயி பாபா, சுவாமி சிவானந்தர், சுவாமி சித்தானந்தர், சுவாமி ஞானானந்தர், சுவாமி இராமதாசர், அன்னை கிருஷ்ணபாய், காட்டுச் சாமியார் ஆகியோரின் தரிசனங்களும் இவருக்குக் கிடைத்திருக்கின்றன. பித்துக்குளி முருகதாஸ் இவருக்கு நண்பர்.

1955ஆம் ஆண்டில் இவர் மேற்கொண்ட இமயமலை

யாத்திரையின்போதும் கேதாரநாத் (பாண்டவர்கள் பூசித்த சிவலிங்கம் உள்ள தலம்), பத்திரிநாத் (கண்ணபிரான் தலம்), துங்கநாத் (இராவணன் பூசித்த ஹரிகரலிங்கம் உள்ள தலம்) ஆகிய திருவிடங்களில் பல சித்தர்களினதும் முனிவர்களினதும் தரிசனங்களைப் பெற்றுஞ் சிறப்பெய்தியிருக்கின்றார்.

மகாத்மாக்களைச் சாதாரண ஆத்மாக்கள் எளிதில் இனங்காண மாட்டா. சித்தானைக் குட்டிச் சுவாமிகளின் பெருமையைக் காரைதீவு வாசிகள் அறிந்துகொள்ளவில்லை. பக்குவம் பெற்ற முத்தையா அவர்கள் மகாத்மாக்களின் இயல்புகளை நன்கு அறிவர். அறிவதோடு நில்லாது பிறருக்கு அறிவிக்கும் பணிகளையும் செய்திருக்கின்றார். அவரது 'ஈழத்துச் சித்தர்கள்', 'முப்பெருஞ் சித்தர்', 'தரிசனம்' ஆகிய நூல்கள் மகான்களின் பெருமைகளை விளக்க எழுந்த படைப்புகளாகும். 'முப்பெருஞ் சித்தர்' காரைதீவில் அரங்கேற்றப்பட்டது. அந்த நூலைப் படித்த பின்னரே சித்தானைக் குட்டிச் சுவாமிகளின் பெருமையை மக்கள் அறியநேர்ந்தது. அதனைத் தொடர்ந்து சுவாமிகளுடைய சமாதியில் குரு பூசை செய்யவுந் தலைப்பட்டனர்.

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே

என்பது திருமந்திரம்.

மகான்களைக் குருமாராகப் போற்றும் மகிமையுள்ளவர் முத்தையா அவர்கள். இறைவன் குருவடிவிலே எழுந்தருளும் இயல்பினன் ஆதலால், மகான்களில் இறைவனைக் கண்டு இன்புற்று வருபவர் அவர். அவரது 'தரிசனம்' என்னும் நூல் மகான்களைக் கண்டு அனுபவித்த இறை இன்பத்தை அள்ளிச் சொரிகின்றது. அவர் அனுபவித்த இறை இன்பம் அற்புதங்களோடு கலந்த அருள் இன்பம்.

# 14

# அற்புத பாகர்

பாகம் – பகுதி, கூறு. பாகன் – பகுதியானவன். மாதொரு பாகன் – பெண் ஒரு பகுதியானவன், பாதியானவன். அற்புத பாகர் – அற்புதங்களைத் தன் வாழ்க்கையின் பகுதியாகக் கொண்டவர், அற்புதங்களுக்குப் பாத்திரமானவர்.

ஆம். முத்தையா அவர்களின் வாழ்க்கையிற் பல அற்புதங்கள் நடந்திருக்கின்றன. அவர் சீவனைச் சிவமாக்கி இருப்பவர். தெய்வ சிந்தனையே வாழ்க்கையாகக் கொண்டவர். சிவத்தை உள்ளத்தில் வைத்து எப்பொழுதும் பூசிப்பதால் விழிக்குத் துணையாக, மொழிக்குத் துணையாக, பிறர் செய்யும் பழிக்குந் துணையாக இருந்து சிவசக்தி அவரை வழி நடத்துகின்றது. தெரியாமற் செய்யும் உதவிகளைச் சில சமயங்களில் இறைவன் தெரிவிக்கின்றான். அவ்விதம் தெரிவிப்பதை இனங்காண வல்ல பக்குவம் பெற்றவர் அவற்றை அற்புதங்களாகக் கொள்கின்றனர். அற்புதங்களும் ஞானக்கண் உள்ளவர்களுக்கே வெளிச்சமாகும்.

முத்தையா அவர்கள் பத்துப் பன்னிரண்டு வயதாக இருக்கும்பொழுது ஒரு சாமியார் திடீரென ஒருநாள் வீட்டுக்கு வந்தார். தந்தையாரும் தாயாரும் வீழ்ந்து வணங்கினர். தாயார் அவருடைய பாதங்களைக் கழுவும் பொருட்டுத் தண்ணீர் எடுக்க உள்ளே சென்றார். தண்ணீர் வேண்டாம் என்று சாமியார் தாயாரை அழைத்தார். உண்மை என்னவென்றால், தாயார் தண்ணீர் எடுக்கச் சென்றவேளை பானையில் தண்ணீர் இருக்கவில்லை. சாமியார் அதனை அறிந்து கொண்டு கிணற்றடிக்குச் செல்ல நினைத்த தாயாரைத் தடுத்துவிட்டார். இவரே சரவணைச் சாமியார் என்று பொதுவாக அழைக்கப்படும் அச்சுவேலியைச் சேர்ந்த சடைவரத சுவாமிகள்.


பெற்றார் விழுந்து கும்பிட்டபடியாற் சிறுவர் முத்தையாவும்

விழுந்து கும்பிட்டார். சுவாமிகள் சிறுவரின் தலையில் கைவைத்து, 'நீ சட்டம்பியாராய் இருப்பாயடா; உலகம் சுற்றுவாயடா; ஒரு குறையும் இல்லாது வாழ்வாயடா என்று ஆசீர்வதித்தார். இந்த வாழ்த்துக்கள் அனைத்தும் முத்தையா அவர்களின் வாழ்க்கையிற் பலித்துவந்த வாழ்த்துக்கள் என்பது கண்கூடு.

ஒருமுறை யோகர் சுவாமிகளைத் தரிசிக்க முத்தையா புறப்பட்டார். அதற்குமுன் அவர் சுவாமிகளைப் பார்த்ததில்லை. ஆனால் நிறையவே கேள்விப்பட்டிருந்தார். வழியில் ஸ்ரீலங்கா புத்தகசாலையில் அவருக்கு ஒரு செய்தி கிடைத்தது. 'சுவாமிகள் உங்களைத்தான் எதிர்பார்த்து இவ்வளவு நேரமும் இங்கே நின்றார். முத்தையன் வந்தால் அவனை வீட்டுக்கு வரச் சொல் என்று சொல்லிவிட்டு வந்தவொரு மோட்டார் வாகனத்தில் ஏறிச் சென்றுவிட்டார்' என்றார் புத்தகசாலை அதிபர். முத்தையா அவர்களுக்கு வானம், பூமி எல்லாம் சுழன்றன. தான் சந்திக்கப் போவதை அவர் எப்படி அறிந்துகொண்டார் என்று நினைந்து ஆச்சரியப்பட்டார். மேலும், தனது பெயரையும் அவர் அறிந்திருந்தது வியப்பிலும் வியப்பாக இருந்தது. பக்தி பரவசத்துடன் ஓட்டமும் நடையுமாகக் கொழும்புத்துறைக்குச் சென்றார். யோகர் சுவாமிகளின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினார். பல விடயங்கள் பற்றியும் பேசினர். பின்பு இருவரும் சேர்ந்து சிவபுராணம் படித்தனர். முடிவில், 'ஓடுங்காணும், பிட்டு அவித்து வைத்திருக்கிறார்கள். போய்ச் சாப்பிடும்' என்று அனுப்பிவிட்டார்.

முத்தையா அவர்களுக்குப் பிட்டுக் கதை விளங்கவில்லை. வெளியில் ஒரே இருட்டு. மின்சார வெளிச்சம் இல்லாத காலம். அந்த வீதியால் வசுவண்டிகளும் அப்பொழுது ஓடுவதில்லை. சுவாமிகள் போகச் சொன்னாலும் அங்கேயே அன்றைக்குத் தங்க வேண்டும் என்ற தீர்மானத்துடன் வெளியிலேயே நின்றார். சிறிது நேரத்தில் மோட்டார் வாகனத்தில் வந்த திருநெல்வேலியைச் சேர்ந்த அன்பர் ஒருவர் அவரை வீட்டுக்குக் கொண்டு போய் விடுவதாக வாகனத்தில் ஏற்றினார். வழியில் தனது வீட்டுக்கு அழைத்துச் சென்று சாப்பிடும்படி வற்புறுத்தினார்.

அந்த அன்பரின் திருமதியார் கத்தரிக்குழம்பு, மரவள்ளி மசியல், பாகற்காய்ப் பொரியல் ஆகியவற்றுடன் பிட்டைப் பரிமாறினார்.. சாப்பிடும்போது, 'இது யோகர் சுவாமி தந்த பிட்டுப் போல இருக்கிறது அம்மா' என்றார் முத்தையா. அம்மையார் அதனைக் கேட்டு, இரவு யோகர் சுவாமி கனவில் வந்து தனக்குப் பிட்டுத் தின்ன ஆசையாய்



சமய அறிவுக்குப் பரிசு வழங்குதல்

இருக்கிறது என்று கேட்டதாகவும் அவர் வரவை எதிர்பார்த்தே தான் பிட்டு அவித்ததாகவும் கூறிக் கண்ணீர் விட்டார். முத்தையா நடந்ததை விளங்கப்படுத்தி அம்மையாருக்கு ஆறுதல் கூறினார்.

யோகர் சுவாமிகள் தனது அன்பரைக் காத்திருந்து வரவேற்று உணவு கொடுத்து உபசரித்தவிதம் உள்ளத்தை உருக்குகின்றது.

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா முத்தையா அவர்களுக்குக் கலிபோனியாவைச் சேர்ந்த செல்வி சாள்ஸ் ஹில்டா அம்மையார் மூலம் சில அற்புதங்களைக் காட்டியிருந்தார். அவற்றையெல்லாம் நினைந்துருகி சாயி பாபா அவதார புருடர் மட்டுமல்ல, பகவானேதான் என்ற உறுதிப்பாட்டுடன் அவரைத் தரிசிப்பதற்கு வேறு ஐவருடன் யாத்திரை மேற்கொண்டார்.

திருச்சியில் இருந்து புட்டபர்த்திக்கு ஒரு மோட்டாரிற் புறப்பட்டனர். வழியிற் பல தலங்களையும் தரிசித்துக் கொண்டு சென்றனர். புட்டபர்த்திக்குப் பங்களூர் வழியாகச் செல்ல வேண்டும். பங்களூரில் இருந்து புட்டபர்த்தி 108 மைல் தூரத்தில் உள்ளது என்பது மட்டும் அவர்களுக்குத் தெரியும். மற்றும்படி வழி சரியாகத் தெரியாது. ஓர் இடத்துக்குச் செல்ல ஒரு வழிதானா, எத்தனையோ வழிகள் இருக்க வேண்டுமே. பங்களூருக்குச் செல்லாமல் வேறுதூரம் குறைந்த வழியால் புட்டபர்த்திக்குச் செல்லமுடியாதா என்றெல்லாம் பேசிக்கொண்டு சென்றனர். சில நிமிடங்களில் தெருவோரத்தில் விபூதிக் கோலத்துருடன் ஒருவர் நிற்பதைக் கண்டனர். அவரிடம் புட்டபர்த்திக்கு வழிகேட்டனர். அவர் சாயி பாபா அச் சமயம் மிக அண்மையிலுள்ள பிருந்தாவனத்தில் இருக்கும் செய்தியைக் கூறிப் பிருந்தாவனத்துக்குச் செல்லும் வழியையும் காட்டி மறைந்து விட்டார். பாபாவேதான் அப்படி வந்து பாதை காட்டினார் என்பதை அவர்களால் நம்ப முடியவில்லை. அதனைப் பாபா பின்பு சுட்டிக் காட்டிய பொழுதே அவர்களுக்குப் பாபாவின் அற்புதத்தை ஐயப்பாட்டுக்கு இடமின்றி விளங்கக் கூடியதாக இருந்தது.

பிருந்தாவனத்தில் அறுவருக்கும் விசேட தரிசனம் கிடைத்தது. பதினைந்து நிமிடங்கள்வரை பாபா பக்தியைப் பற்றிப் பேசினார். முடிவில் முத்தையா அவர்களை நோக்கி, 'மக்களுக்கு இன்று கடவுள் நம்பிக்கை இல்லை; பக்தியுமில்லை. நீ சென்று நம்பிக்கையைப் பற்றியும் பக்தியைப் பற்றியும் பேசு, எழுது' என்று பணித்தார். எல்லாரும் வீழ்ந்து வணங்கினர். சுவாமி 'புட்டபர்த்திக்குச்

செல்லுங்கள், நான் அங்கு வருகிறேன்' என்று கூறி அவர்களைப் புட்டபர்த்திக்கு அனுப்பிவைத்தார்.

புட்டபர்த்தியிலும் அவர்களுக்கு நிறைவான தரிசனமும் ஆசீர்வாதமும் கிடைத்தன. அவர்களது வண்டிச் சாரதி இராஜகோபலன் வேலை ஒன்றுக்கு விண்ணப்பித்திருந்தார். அதுவும் சுவாமிக்குத் தெரிந்து விட்டது. 'நீ ஒரு கோயில் கும்பிடாத பக்தன். வேலை ஒன்றுக்கு விண்ணப்பித்திருக்கிறாய். அது கிடைக்கும்' என்று ஆசீர்வதித்தார். பின்பு சுவாமி கூறியபடி தனக்கு வேலை கிடைத்ததாகவும் தான் நல்லாய் இருப்பதாகவும் இராஜகோபாலன் மூத்தையா அவர்களுக்குக் கடிதம் எழுதியிருந்தார்.

இதுபோலவே, திருக்கோவலூர் ஞானானந்த சுவாமிகளைத் தரிசிக்கச் சென்றபோதும் அற்புதங்கள் நிகழ்ந்தன. ஞானானந்த ஆச்சிரமத்துக்கு எவ்வித அறிவித்தலும் இன்றி முத்தையா குழுவினர் சென்றனர். ஆனால், அவர்களின் வருகை பற்றி இனந்தெரியாத ஒருவர் அறிவித்திருந்ததையும் அதனால் அவர்களை வரவேற்பதற்கான ஆயத்தங்கள் முன் கூட்டியே செய்யப்பட்டிருந்ததையும் அறிந்தபோது அவர்கள் வியந்தனர். இறைவனின் திருவிளையாடலை எண்ணிக் கசிந்து போற்றினர்.

இவரது தந்தையார் நாகமணி அவர்கள் சிவராத்திரி தினத்திற் காலமாகியதும் ஒரு தெய்வீக நிகழ்ச்சியாகும். இரவு 9.00 மணிக்கு அவர் சிவபதம் அடைந்தபோது, சுற்றியுள்ள எல்லாக் கோயில்களிலும் சிவராத்திரி முதலாவது சாமம் பூசைக்கு மணிகள் ஒலித்துக் கொண்டிருந்தன.

இவ்விதம் எத்தனையோ அற்புதங்கள் முத்தையா அவர்களின் வாழ்க்கையில் நிகழ்ந்திருக்கின்றன. அவைபற்றி அவர் அதிகம் பேசுவதில்லை. எனினும் 'தரிசனம்' என்ற நூலிற் சிலவற்றை வெளிக்காட்டியிருக்கின்றார். முதிர்ந்த ஆன்மாக்களுக்கு இறைவன் தனது கருணைத் திறத்தைச் சில சமயங்களில் வெளிப்படையாக உணர்த்தி வருகின்றான். முத்தையா அவர்களின் ஆன்ம முதிர்ச்சியும் உள்ளப் பக்குவ உயர்வும் பக்திச் சிறப்பும் இறைவனை எங்கும் எதிலும் காண வைக்கின்றன.

அன்பர்களுக்கு மட்டுமன்றி அன்புக்காக ஏங்கும் அனாதைகளுக்கும் அவனே துணை.

# 15

# அனாதைகளின் அப்பன்

முத்தையா அவர்கள் பரம பிரமசாரி. இந்தப் பிரமசாரியை அறுபது பிள்ளைகளுக்கு இப்பொழுது தந்தை ஆக்கியிருக்கின்றான் இறைவன். ஆம், கைதடியில் உள்ள சைவச் சிறுவர் இல்லத்தில் உள்ள பிள்ளைகள் இவரை அப்பா என்றும் ஐயா என்றும் அழைத்துப் பெற்ற தாயாகவும் தந்தையாகவும் மதித்துப் போற்றிவருகின்றனர்.

கைதடியில் உள்ள சைவச் சிறுவர் இல்லம் இப்பொழுது யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் பொறுப்பில் இருந்துவருகின்றது. இப்பேரவை 1992 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25ஆம் நாள் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இதன் தலைமைச் செயலகம் நல்லை (நல்லூர்) திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் அமைந்துள்ளது. ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், மகாராஜஸ்ரீ சு.து. ஷண்முகநாதக் குருக்கள், சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் பேரவையின் காப்பாளர்களாக வுள்ளனர். இதன் தலைவர் திரு. நா. முத்தையா அவர்கள்.

இந்து சமயப் பேரவையின் நோக்கங்கள் பின்வமாறு:

1. இந்து சமயத்தையும் பண்பாட்டையும் பேணிப் பாதுகாத்தலும் போற்றி வளர்த்தலும்.
2. இந்து சமயிகளின் உரிமைகளைப் பாதுகாத்தல்.
3. இந்து சமயிகளின் ஆன்மீக, கல்வி, கலை கலாச்சார, சமூக மேம்பாட்டுக்காக உழைத்தல்.
4. இந்து சமயிகளைப் பிற மதங்களுக்கு மாற்றஞ் செய்வதற்கு எடுக்கப்படும் சகல முயற்சிகளையும் நடவடிக்கைகளையும் தடுத்தல்.
5. அனைத்துலக இந்து சமயிகளின் ஒற்றுமையைப் பேணி வளர்த்தலும் புரிந்துணர்வை மேம்படுத்தலும்.



**ஸ்ரீ சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளுடன் ஆத்மஜோதி அவர்களும் இந்து சமயப் பேரவை நிர்வாகிகள் சிலரும்**

6. இந்து சமய வழிபாட்டுத் தலங்ளைப் பாதுகாத்தலும் வேத ஆகம விதிமுறைகளை அனுசரித்து ஆலய வழிபாடுகள் நடைபெறுவதைப் பேணுதலும்.
7. ஏழைகளுக்கு உதவுதலும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக அனாதரவானோருக்கு, குறிப்பாக விதவைகள், அனாதைகள், அங்கவீனர் ஆகியோருக்கு உதவுதலும்.

இந்துசமயப் பேரவை மேற்கொண்டுவரும் பணிகளுள் கைதடியிலுள்ள சைவச் சிறுவர் இல்லத்தைப் பொறுப்பேற்று நடத்தி வருகின்றமை முக்கியமான தொன்றாகும். திரு. ஆறுமுகம் கந்தையா என்பவரால் நல்லவாறு நடத்தப்பட்டு வந்த இச் சிறுவர் இல்லம் நாட்டின் போர் நிலைமை காரணமாகச் செவ்வனே இயங்க முடியாதிருந்தது. அதேவேளை, நாட்டின் போர் நிலைமை பல குழந்தைகளை அனாதைகளாக்கிக் கொண்டும் இருந்தது. இதனைக் கண்ணுற்ற பேரவைத் தலைவர் முத்தையா அவர்கள் ஊர்மக்களின் உதவியுடன் இல்லத்தை மீண்டும் இயங்க வைத்தார். அதனை மேற்பார்வை செய்யும் பொறுப்பையும் பேரவை அவரிடமே ஒப்படைத்தது. இல்லத்தில் இப்பொழுது அறுபது அனாதைக் குழந்தைகள் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்கள் பொதுவாக ஏழு வயதுக்கும் பதினான்கு வயதுக்கும் இடைப்பட்டவர்கள். தாயை இழந்தவர், தந்தையை இழந்தவர், பெற்றோர் இருவரையும் இழந்தவரென இவர்கள் பலதரப்படுவர். இவர்களின் உணவு, உடை, கல்விச் செலவினங்கள் அனைத்துக்கும் பேரவையே பொறுப்பாகும்.

இவ் விபரங்களை எல்லாம் கனடாவில் சாவகச்சேரித் தொகுதிப் பெருமக்கள் 24.07.1994, ஞாயிற்றுக்கிழமை மாலை தமக்கு அளித்த விருந்துபசார வைபவத்தில் முத்தையா அவர்கள் கூறினார்கள். அவர் மேலும் கைதடிச் சைவச் சிறுவர் இல்லம் பற்றிக் கூறியதாவது:

"பிள்ளைகள் இல்லாத எனக்குக் கடவுள் பிள்ளைகளைப் பராமரிக்கும் பொறுப்பைத் தந்திருக்கின்றார். குழந்தைகளுக்கு உணவு, உடை முதலியன கொடுப்பதல்ல முக்கியம். சிறு பராயத்தில் அவர்கள் எதிர்பார்க்கும் பாசத்தைக் கொடுத்து வளர்க்க வேண்டும். அனாதைக் குழந்தைகள் மீது அன்புகாட்டுவது மிகவும் அவசியம். மற்றவர்களைப் போல எமக்குத் தாய் இல்லையே, தகப்பன் இல்லையே என்று அவர்கள் வருந்தாதவாறு வளர்க்க வேண்டும்.

"அதுமட்டுமல்ல. குழந்தைகளின் தேவை வெறும் உணவும்

உடையும் தங்கும் இடமும் அல்ல. இவைகள் அடிப்படைத் தேவைகள். அடிப்படைத் தேவைகளுக்கு அப்பாலும் அவர்களுக்குச் சில விருப்பங்கள் இருக்கும். அவ்விருப்பங்கள் முழுவதையும் எம்மால் பூர்த்தி செய்ய முடியாது போனாலும் ஒருசிலவற்றையாகுதல் நிறைவேற்றுதல் நமது கடமையாக இருத்தல் வேண்டும்.

"அடியேன் வெளிநாடுகளுக்குப் பயணமாகப் போவதை அறிந்த குழந்தைகள் சிலர் அழுதார்கள். போக வேண்டாம் என்றும் தங்களுடனேயே இருக்க வேண்டும் என்றும் சொல்லிக் கையைப் பிடித்துக் கொண்டார்கள். அடியேன் 'வெளிநாடுகளுக்குச் சென்று உங்களுக்குக் காசு சேர்த்துக் கொண்டு வருகின்றேன்' என்று அவர்களுக்குச் சமாதானம் சொன்னேன். போவதற்குமுன் தங்களைப் பன்றித்தலைச்சி அம்மன் கோயிலுக்குக் கூட்டிக்கொண்டு போனாற்றான் விடுவோம் என்றார்கள். அடுத்த நாள் பங்குனித் திங்கள்.

"உடனேயே இயக்கக் காரியாலயத்துக்குச் சென்று குழந்தைகள் நாளைக்குப் பன்றித் தலைச்சி அம்மன் கோயிலுக்குப் போக ஆசைப்படுகிறார்கள் என்று சொல்லி வாகன உதவி கேட்டேன். அவர்கள் அடுத்தநாள் அதிகாலையே வந்து எல்லோரையும் ஏற்றிக்கொண்டு போனார்கள். கும்பிட்டுப் பொங்கிச் சாப்பிட்டு இல்லத்துக்குத் திரும்பினோம். குழந்தைகளின் ஆனந்தத்துக்கு அளவே இல்லை.

"ஆனாலும், அவர்கள் அம்மட்டோடு நின்று விடவில்லை. படம் ஒன்று பார்க்க வேண்டும் என்றும் ஆசைப்பட்டார்கள் மீண்டும் இயக்க உத்தியோகத்தர்கள் உதவியை நாடினேன். அவர்கள் குழந்தைகளுக்கு ஏற்றதாக ஒன்றுக்கு மூன்றுபடங்களைக் கொண்டுவந்து போட்டுக் காட்டினார்கள். அவர்களின் நிர்வாகத்தில் எங்களுக்கு எவ்வித குறையுமில்லை. பிள்ளைகளுக்குப் பரம திருப்தி. நானும் திருப்தியுடன் புறப்படக் கூடியதாக இருந்தது.

"இவற்றையெல்லாம் ஏன் சொல்லுகிறேன் என்றால், பிள்ளைகளின் நியாயமான ஆசைகளைப் பூர்த்தி செய்து அன்போடு ஆதரிப்பதுதான் உண்மையான வளர்ப்பாக இருக்கும். இதற்கெல்லாம் பேரவைக்கு நிறையச் செலவு ஏற்படும். நிதியுதவி செய்ய விரும்புவோர் என்னுடன் தொடர்பு கொள்ளலாம். அதற்குரிய ரசீது வழங்கப்படும்.

"சில திட்டங்களின் அடிப்படையில் நிதி திரட்டப்படுகின்றது.

ஒரு பிள்ளையைப் பராமரிக்கும் பொறுப்பை எடுக்க விரும்புவோர் மாதாமாதம் 15 டாலர்கள் உதவ வேண்டும். உற்றார் உறவினர்களின் நினைவாக அல்லது வேறு காரணத்துக்காக இல்லக் குழந்தைகளுக்கு ஒரு குறிப்பிட்ட தினத்தில் அன்னமிட விரும்புவோர் 500 டாலர்களை வழங்குதல் வேண்டும். அத்தொகை வங்கியில் சேமிப்புக் கணக்கில் இடப்பட்டு அதனாற் பெறப்படும் வட்டிக்குக் குழந்தைகளுக்கு நன்கொடைகாரர் விரும்பிய தினத்தில் அன்னதானம் செய்யப்படும்.

"உங்கள் உறவினர் வேறு நாடுகளில் இருப்பின் அவர்கள் 'இந்து சமயப் பேரவை, யாழ்ப்பாணம் – கைதடி சைவச் சிறுவர் இல்லக் கணக்கு இலக்கம் C. 23446, இலங்கை வங்கி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்' என்ற கணக்குக்கு அனுப்பலாம்.

"கனடாவிலும் ஓர் இந்து சமயப் பேரவையை அண்மையில் உருவாக்கியுள்ளோம். வருங்காலத்தில் சைவச் சிறுவர் இல்லத்துக்கு உதவ விரும்புவோர் பேரவையின் பொருளாளர் திரு. சிவ முத்துலிங்கம் அவர்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

"நீங்கள் கனடாவை நோக்கி வந்தீர்கள். அடியேன் உங்களை நோக்கி வந்துள்ளேன். நீங்கள் கனடாவில் வாழ்ந்தாலும் ஈழநாட்டைச் சேர்ந்தவர்கள். உங்களுடைய உடன்பிறப்புகள் பலர் போராட்ட நிலைமைகளின் விளைவாக அனாதைகளாக்கப் பட்டுள்ளனர். அவர்களுக்கு உங்களாலான சகல உதவிகளையும் செய்வதற்கு நீங்கள் முன்வரவேண்டும்.


"ஒரு பெரியார் ஒருமுறை இல்லத்துக் குழந்தைகளுக்கு அன்னதானம் செய்தார். அன்னதானம் முடிந்த பிறகு அவரைப் பாராட்டி நன்றி தெரிவித்து அடியேன் பேசினேன். அவர் சொன்னார், 'எனக்கு எதற்கு நன்றி தெரிவிக்கிறீர்கள். தருமம் செய்வதற்கு ஒரு சந்தர்ப்பத்தைத் தந்த உங்களுக்கு அல்லவோ நான் நன்றி சொல்ல வேண்டும்' என்று. அதுபோல, உங்களுக்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. தருமம் செய்வதற்கு ஒரு நல்ல சந்தர்ப்பம். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவது உங்கள் பொறுப்பு."

மகாத்மா காந்தி மக்கள் சுதந்திரத்துக்காக ஊர் ஊராகச் சென்றார். வினோபாவே பூதானத்துக்காக ஊர் ஊராக நடந்தார். முத்தையா அனாதைகளாக்கப்பட்ட குழந்தைகளுக்காக நாடுகள் தோறும் கையேந்திச் செல்கின்றார்.

தந்தையின் பாசம் தள்ளாத வயதிலும் தள்ளிக் கொண்டிருக்கின்றது.

உண்மையில், அனாதியானவனே அனாதைகளுக்கெல்லாம் அப்பன். அவன் தனது அடியவர்கள் மூலம் தனது குழந்தைகளைக் கவனித்து வருகின்றான்.

அடியவர்கள் பலனை எதிர்பாராது பணிசெய்து கிடப்பவர்கள்.



24. 07. 1994ல் சாவகச்சேரித் தொகுதிப் பெருமக்கள் அளித்த விருந்துபசார வைபவத்தில்

# 16

# ஞானசுரபி

சமய ஞானம் பெற்றவர்கள் பட்டம் பதவிகளை எதிர்பார்த்துப் பணிகள் புரிவதில்லை; ஆணவப் பேச்சுக்கள் பேசுவதில்லை; சமயத்தின் பெயரால் அறியாமைச் சண்டைகள் பிடிப்பதில்லை. போட்டி பொறாமைகளுக்கும் ஏற்றத் தாழ்வுகளுக்கும் சமயத்தில் இடமில்லை.

விருப்பு வெறுப்பற்ற உள்ளப் பக்குவம் பெற்றவர்கள் பெருகிவரும் அன்பினால் இறைவனை ஏத்துதலன்றி, வீடு பேறாகிய அந்தப் பதவியைக்கூட எதிர்பாராத வைராக்கியம் படைத்தவர்கள்.

கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்

என்பது சேக்கிழார் பெருமான் புராணம்.

இத்தகைய 'விறலின் விளங்கும்' முத்தையா அவர்களைப் பட்டங்களும் பாராட்டுகளும் தேடிவரவே செய்கின்றன. தன்னலமற்ற சேவையைச் சமுதாயம் எளிதில் இனங்கண்டு கொள்ளும். சமயப் பணிக்குத் தன்னையே அர்ப்பணித்துள்ள சுத்த பிரமசாரியருக்கு நன்றி செலுத்தும் வகையிற் பல பாராட்டுக் கூட்டங்களை நடத்தியும் பதினைந்துக்கும் மேற்பட்ட பட்டங்களை வழங்கியும் அன்பர்கள் ஆராதித்திருக்கின்றனர். மணி விழா ஒன்றை நடத்தியும் மகிழ்ந்திருக்கின்றனர்.

பட்டங்களுள் 'ஆத்மீக வள்ளல்' என்பதுவும் ஒன்று. இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களாற் சூட்டப்பட்டது. எனினும், இப்பட்டங்கள் எல்லாவற்றுக்கும் மேலாக,

முத்தையா அவர்களின் பத்திரிகையின் பெயராகிய 'ஆத்மஜோதி' என்பதனையே அன்பர்கள் அதிகம் அவரது பெயருக்கு முன்னால் பயன்படுத்தி வந்ததன் விளைவாக அதுவே இயல்பான ஒரு பட்டமுமாகி விட்டது. தமது தொண்டுகளால் எத்தனையோ ஆத்மாக்களைச் சிவமயமாக்கி ஒளிபெறச் செய்த முத்தையா அவர்களுக்கு 'ஆத்மஜோதி' என்பதே பொருத்தமானது என்பது தெய்வ சித்தம் போலும். அது எப்பொழுதோ முடிவான காரியம்.

இருப்பினும் மேலும் ஒரு பட்டம் கனடாவில் வைத்து வழங்கப்பட்டது. கனடா இந்து சமயப் பேரவையினரால் 30.07.1994 சனிக்கிழமை முத்தையா அவர்களுக்கு எடுக்கப்பெற்ற பாராட்டு விழாவில் ஞானசுரபி என்ற பட்டத்தை வழங்கி இந்நூலாசிரியர் நிகழ்த்திய மாண்புரை பின்வருமாறு:

"அறிவு கல்வி, கேள்வி, காட்சி அனுபவங்களால் உண்டாவது. அறிவின் பயன், எல்லாம் அறிந்த, தூய அறிவே வடிவமான இறைவனை வணங்குவது:

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்

என்பது வள்ளுவனார் வாக்கு. இந்தப் பயனிலே வழுவாது நிற்பவர் ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள்.

"அறிவின் தெளிவு ஞானம். ஞானத்தின் எல்லை மோனம்.

"ஞானங்கள் பலவகைப்படும். நால்வகை ஞானங்களை வரிசைப்படுத்துகின்றார் சேக்கிழார் பெருமான். அழுகின்ற பிள்ளையாருக்குத் துணைமுலைப்பால் ஊட்டென்று சிவபெருமான் அருளுதலும் கருணைதிருவடிவான சீரணங்கு எண்ணரிய சிவஞானத் தின்னமுதம் குழைத்தருளுகின்றாள். அவ்வளவில், பிள்ளையார் சிவஞானசம்பந்தர் ஆகின்றார். நால்வகை ஞானங்களையும் உணர்கின்றார்.

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்

என்னும் புராணத்தில் சேக்கிழார் பெருமான் ஞானங்களை வரிசைப்படுத்துகின்றார்.

"இவ் வரிசைமுறை சிவஞானத்தில் தொடங்கி மெஞ்ஞானத்தில் முடிவதைக் காண்கின்றோம். இதிலிருந்து சகல ஞானங்களுக்கும் சிவஞானமே மூலமாவதும் அதுவே மெய்ஞ்ஞானத்துக்கு ஆன்மாவைக் கொண்டுசெல்ல வல்லதென்பதும் வெளிப்படையாகின்றது.

தென்தமிழும் வடகலையும் தேசிகமும் பேசுவன
மன்றினிடை நடம்புரியும் வள்ளலையே பொருளாக
ஒன்றியமெய் யுணர்வோடும் உள்ளுருகி ....

ஆசிரியத் தொழில் புரிந்த ஆத்மஜோதி முத்தையா அவர்களுக்கு சிவஞானம் எப்பொழுதோ தெளிவாகிவிட்டதொன்று.

"எப்பொழுது சிவப்பணியே மேலான பணி, மற்றைய பணிகள் எல்லாம் அவப்பணிகள் என்ற உண்மையை உணர்ந்து அப்பணிக்குத் தன்னை முழுதாக அர்ப்பணித்துக் கொண்டாரோ, அப்பொழுதே அவருக்குச் சிவஞானம் பிறந்துவிட்டது.

"ஞானம் பிறப்பதற்கு உள்ளம் பரிசுத்தமாயிருத்தல் வேண்டும். மனத்துக்கண் மாசிலாத் தன்மை, புலனடக்கம், பற்றற்ற நிலை முதலாய ஞான வெளிப்பாட்டுக்குரிய தகைமைகள் திரு. முத்தையா அவர்களிடம் இருப்பதை அவருடன் நன்கு பழகியவர் அறிவர். இத்தகைமைகளிலும் பல படிநிலைகள் உள்ளன. திரு. முத்தையா அவர்கள் எத்தகைய படிநிலையில் உள்ளார் என்பது எம்மால் அளவிட முடியாதது. அது இறைவன் ஒருவனாலேயே மதிப்பிடத்தக்க நிலையாம்.

"இவ்விதமான தகைமைகள் தரும சிந்தனையுள்ளவர்க்கே கைகூடும். ஞானம் விளையும் நிலத்துக்குத் தரும நிலம் என்று பெயர். வேதம் ஞான காண்டம் கரும காண்டம் என இருவகைப்படும். கரும காண்டத்தில் கரும சுத்தி சுயதருமத்தில் ஆரம்பமாகின்றது என்று சொல்லப்படுகின்றது. கரும சுத்தியில் ஞானம் உதயமாகும் என்று ஞான காண்டம் விளக்குகின்றது. திரு. முத்தையா அவர்கள் தருமத்தை அறிய முயன்ற காரணத்தினாலே சிவத்தை உணரக்கூடியதாக இருந்தது.

"சிவத்தைத் தன்னுள்ளேயன்றி எல்லாரிடத்திலும் காணும் ஞானம் பெற்ற தன்மையினாலே மக்கள் பணியே மகேஸ்வரன் பணி என்னும் தெளிவு பெற்றவர் திரு. முத்தையா அவர்கள்.

"ஞானிகள் பலர் மலையடிவாரங்களில் தவம் செய்பவர்களாகவும் மடாதிபதிகளாகவும் கோலம் கொண்டு தெய்வ சிந்தனையில் மூழ்கியிருப்பதை நாம் அறிவோம். திரு. முத்தையா அவர்கள் வித்தியாசமான ஒரு ஞானி. மக்களுடன் உறவாடி அவர்களையும் சிவசம்பத்தப்படுத்தும் பலவகைப் பணிகளில் அல்லும் பகலும் அயராது ஈடுபட்டு வருகின்றார். அப்பணிகள் மூலம் சிவஞானத்தை மற்றவர்களுக்கும் சுரந்தளிக்கும் சுரபியாகவும் விளங்குகின்றார். சுரபி என்றால் காமதேனு என்று பொருள்.


ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி
ஊராத்துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவ
தண்ணிழலாம் பதிவிதி எண்ணும் அஞ்செழுத்தே

என்பது சிவஞான போதம்.

"ஊனக் கண்ணினால் இறைவனைக் காணமுடியாது. அவனைக் காண்பதற்கு ஞானக்கண் திறபடல் வேண்டும். தனது எழுத்துக்களாலும் பேச்சுக்களாலும் சைவ சமய அறிவை வழங்கியும் கூட்டுப் பிரார்த்தனைகள், பாத யாத்திரைகள் என்பனவற்றால் பக்தியை வளர்த்தும் அந்தர் யோக வகுப்புகளால் அந்தக் கரணங்களைச் சுத்தி செய்தும் மக்களின் ஞானக்கண்களைத் திறக்கப் பணிசெய்து கிடக்கும் திரு. முத்தையா அவர்களுக்கு 'ஞானசுரபி' என்னும் பட்டம் மிகவும் பொருத்தமானதே.

இப் பட்டத்தை வழங்குவதற்கு அடியேனுக்குக் கிடைத்த பேறு குறித்து மகிழ்ந்து, எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை வணங்கி, ஏழாலை இலந்தைகட்டி ஞான வைரவரின் பெருங் கருணைத் திறத்தை நினைந்து போற்றி, கனடா இந்து சமயப் பேரவையின் சார்பில், இங்கு கூடியிருக்கும் அவையோர்கள் சான்றாக 'ஞானசுரபி' என்னும் பட்டத்தைத் திருத்தொண்டர் நா. முத்தையா அவர்களுக்கு வழங்கி, இன்று முதல் அவரை 'ஞானசுரபி' முத்தையா எனத் தமிழ் கூறும் நல்லுலகம் அழைக்கக் கடவதெனப் பிரகடனப்படுத்துகின்றேன்."

முத்தையா அவர்கள் தமது பதிலுரையை இப்படிச் சொல்லித் தொடங்கினார்: 'யோசிக்கின்றேன், யோசிக்கின்றேன், யோசிக்கின்றேன். இதற்கெல்லாம் அடியேன் தகுதியானவன் தானோவென யோசிக்கின்றேன்.'



*30. 07. 1994ல் கனடா இந்து சமயப் பேரவை அளித்த பாராட்டு வைபவத்தில்*

# 17

# பல்லோரும் ஏத்தும் தொண்டர்

ஞானசுரபியும் ஆத்மஜோதியுமான முத்தையா அவர்களின் முத்தான தொண்டுகளை அவ்வப்போது பெரியவர்கள் பாராட்டிப் பேசியும் எழுதியும் வந்திருக்கிறார்கள். எழுத்தில் வந்தவை ஏராளம். அவை அனைத்தும் இப்பொழுது கிடைத்தற்கரியன. 'ஆத்மஜோதி' வெள்ளி விழா மலர் – 1973, முத்தையா அவர்களின் வெளிநாட்டுப் பயணம் தொடர்பாக ஏழாலை இலந்தைகட்டி ஞான வைரவர் ஆலய பரிபாலன சபையால் வெளியிடப்பெற்ற வாழ்த்துப் பிரசுரம், கனடாவில் ஒன்ராறியோ மாகாணத்தில் இயங்கும் இந்து சமயப் பேரவையினரால் வெளியிடப்பெற்ற பாராட்டு விழா மலர் ஆகியவற்றிலிருந்து தொகுக்கப்பெற்ற பாராட்டுரைகள் சில பின்வருமாறு:

நாவலப்பிட்டி ஆத்மஜோதி நிலையத்தில் இருந்து உயர்திரு. க. இராமச்சந்திரன், திரு. நா. முத்தையா ஆகிய இருவரும் ஒன்றிணைந்து ஆற்றும் சேவை அளப்பரிய தொன்றாகும். இந்நிலையத்தார் மேலும் பல பல ஆண்டுகள் இந்த நற்பணியில் ஈடுபட்டு அறநெறிகளையும் நற்பணிகளையும பரப்பிவர எல்லாம் வல்ல இறைவனது திருவருள் பாலிக்க வேண்டும் என்று ஆசீர்வதிக்கின்றேன்.

– ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள், காஞ்சிபுரம்
1973

எங்கெங்கு சைவமும் தமிழும் இருக்கின்றனவோ அங்கெல்லாம் தொண்டு செய்யவென்று அவதரித்த பிறவி.

– இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

அமைதியே உருவாய் அமைதியே உரையாய்
அமைதியே உளமென அமைந்து
சமைதிருவாளர் முத்தையா என்னும்
சால்புடைத் தொண்டர்தம் தலைவர்

இமையினை நேர மென்னினும் வீணே
இல்லாத படியருள் தொண்டு
கமையொடும் இயற்றி நல்லருட் கோயிற்
காட்சியென் றொளிர்தரச் செய்தார்.

– கி. வா. ஜகந்நாதன்

தன் மகனைச் சான்றோன் எனக்கேட்டுப் பலர் பணிந்து போற்றக் கண்ட தாய் தந்தைபோல தாசன் ஆத்மஜோதியின் வளர்ச்சியிலும் திரு. முத்தையாவின் தெய்வீக சாதனையின் வெற்றியிலும் மகிழ்கிறான், பூரிப்படைகிறான்.

– பித்துக்குளி ஸ்ரீ முருகதாஸ் சுவாமிகள்

முத்தையா அவர்களின் தந்தையார் நாகமணி; தாயார் பொன்னுப்பிள்ளை. மணியும் பொன்னும் சேர்ந்து முத்தொன்றைப் பெற்றெடுத்திருக்கின்றன.

– வைத்திய கலாநிதி சிவஞானசுந்தரம் (நந்தி)

ஆத்மஜோதி திரு. நா. முத்தையா அவர்களை அறியாதார் இலர் எனலாம். தலைசிறந்த சைவப் பெரியார், கல்விமான், வேதாந்த சாகரம், நல்ல பேச்சாளர், பல அரிய சைவ நூல்களை யாத்துச் சைவ உலகுக்கு உவந்தளித்த பெருந்தகை. அவர் பிறநாடுகளிலும் பெரும்புகழ் ஈட்டியுள்ளார். இன்னும் அவர் பிறநாடுகளுக்கு யாத்திரை மேற்கொள்ளவிருப்பதால் இத்துறையில் கருமம் ஆற்றும் அன்பர்கள் அவருக்கு ஆவன செய்துதவும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

– ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய ஸ்வாமிகள்
நல்லை திருஞான சம்பந்த ஆதீனம்

மேன்மை பெற்ற சைவ சமயத்தில் அவ்வப்போது ஒவ்வொரு கல்விமான்கள் தோன்றிச் சமயத்தைப் பொலிவுறச் செய்ததோடு, சைவ சமயிகளையும் நம்பிக்கை பெறச்செய்து ஆன்மீகத்தை வளர்த்ததாக நாம் வரலாறுகளில் பார்க்கிறோம். இப்போது எம்மத்தியில் அத்தகைய மகானாக அரும்பணியாற்றி வரும் திருவாளர் ஆத்மஜோதி முத்தையா

அவர்கள் திகழ்கிறார் என்பது யாவரும் ஏற்கக்கூடியதும் பெருமை — தருவதுமாகும்.

— "சிவாகம கலாநிதி" சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள்
ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தானம், சுன்னாகம்.

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்"

என்ற வாக்குக்கேற்ப தனது எழுபத்தைந்து ஆண்டு வாழ்நாளில் சைவத் தமிழ் மக்களின் நன் மதிப்பைப் பெற்றவர் ஆத்மஜோதி ஐயா அவர்கள்.

— துர்க்காதுரந்தரி பண்டிதை தங்காம்மா அப்பாக்குட்டி ஜே. பி.
தலைவர் துர்க்காதேவி தேவஸ்தானம்

ஆன்மிகத் தொண்டராகிய திரு. நா. முத்தையா அவர்கள் ஆற்றிவரும் பணிகள் பெறுமதி மிக்கவை. அரை நூற்றாண்டு காலத்துக்கு மேலாக அவர் சமயத்துறையில் ஈடுபட்டு உழைத்து வருகிறார்.

— பேராசிரியர் க. குணரத்தினம்
துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

எனது பிரதேசத்தின் வடபுலம், பல அரிய சைவத் தமிழ்ச் சான்றோர்களைத் தந்துள்ளது. சுன்னாகத்தில் குமாரசாமிப் புலவரும், ஏழாலையில் சி. வை. தாமோதரம்பிள்ளையும், குப்பிழானில் காசி வாசி செந்திநாதையரும், புன்னாலைக் கட்டுவனில் வித்துவான் கணேசையரும் தோன்றி தமிழுக்கும் சைவத்துக்கும் அரும்பணி ஆற்றியுள்ளனர். ஏழாலை கிழக்கைச் சேர்ந்த ஆத்மஜோதி நா. முத்தையா ஐயா அவர்கள் இந்த ஞான பரம்பரையின் தொடர்ச்சியாக தமிழுக்கும் சைவத்திற்கும் அருந் தொண்டாற்றி வருகின்றார்கள்.

— ஆ. மகாலிங்கம்
பிரதேச செயலாளர், மேலதிக அரசாங்க அதிபர்,
வலி தெற்கு, உடுவில்

சைவசமய சாதனைகளில் வழுவாது நின்று கொண்டே சமயங்களானவற்றின் சக்போதனைகளுக்கும் உரிய நன்மதிப்புக் கொடுத்து அகிலமளவும் அன்பியலடிப்படையில் ஆன்மீகப் பணியாற்றும் இவர்கள் சேவை அகில உலக மட்டத்தில், மேன்மை கொள் சைவநீதி, விளங்க வைக்கும் உன்னத இலட்சியத்தினை நிறைவேற்றி "இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க" எனும் அகண்ட பிரார்த்தனைக்கு ஆதர்சமாக நின்று நிலவப் பிரார்த்திக்கின்றோம்.

– சைவர் பெரியார் பண்டிதர் மு. கந்தையா (B.A)

தற்சமயம் கனடா வருகை தந்திருக்கும் ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள் எமது காலத்தில் எம்மத்தியில் வாழ்ந்து வரும் இறை தொண்டர். சிறந்த சைவத் தொண்டர். ஆன்ம ஈடேற்றத்திற்கு ஆன்மநேய வழி நின்று கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாகத் தொண்டாற்றிவரும் மகா தொண்டர் இவர் என்று கூறினால் மிகையாகாது.

– திரு. நா. சிவலிங்கம்
கனடா இந்து ஆலய (றிச்மன்ட் ஹில்)
அறங்காவலர் சபைத் தலைவர்

யாழ். இந்துசமயப் பேரவையின் தலைவராக இவர்கள் கைதடி சைவச் சிறார் இல்லத்தை சிறப்புற நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்று நடாத்துகிறார்கள். ஐயா அவர்கள் அப்பர் சுவாமிகள் காட்டிய வழியில் ஆறுமுக நாவலர் விட்டுச் சென்ற பணிகளைச் சிரமேற்கொண்டு ஒழுகும் பெரியார். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பதற்கு ஏற்ப மக்களுடன் மிகவும் பண்புடன் பழகும் பண்பினர்.

– திரு. அருணாசலம் சோமசுந்தரம்
கிளிநொச்சி (கனடா)

# வாழ்த்து

அன்பின் உருவம் பண்பின் வடிவம்
ஆத்ம ஜோதி முத்தையா
துன்பம் மறையச் சுகங்கள் நிறையச்
சுத்த சைவத் தத்துவத்தை
இன்பம் பொங்க இதயம் குளிர
எளிய முறையில் எடுத்துரைக்கும்
அன்புப் பணிக்குத் தன்னை முழுதாய்
அர்ப்பணித்த அழகையா!

கள்ளங் கபடம் இல்லா வாழ்க்கை
கன்னித் தமிழர் வாழ்க்கையென
உள்ளத் தூய்மை ஒழுக்கம் பொறுமை
ஒற்றுமை யுணர்வென் றிவையெல்லாம்
தெள்ளத் தெளிவாய்ச் சிறுவர்க் குணர்த்தத்
தினமும் நடக்கும் முத்தையர்
பள்ளிப் பாடம் அனைத்தும் மனதைப்
பதப்படுத்தும் வகுப்பாமே!

பேதம் பிணக்கு வாதக் கணக்குப்
பித்தர் உலகப் பிணியின்றி
நீதி நியாயம் நேர்மைக் குரிய
நெஞ்சத் தூய்மை வளர்க்கின்ற
வேதா கமங்கள் மேலோர் வாழ்க்கை
விளக்கக் கதைகள் மிகத்தாங்கி
மாதா மாதம் ஆத்ம ஜோதி
மலரச் செய்த ஆசிரியர்!

பண்டை வினையீ தெனவே பார்த்துப்
பார்த்தக் கொண்டே வாழாது
கண்ட சமூகக் களங்கம் களையக்
கண்டு தக்க வழியாக்கம்
அண்டி வந்த அனாதை கட்கும்
அப்பா லுள்ள வறியோர்க்கும்
தொண்டு செய்யும் முத்தை யாவின்
தூய நெஞ்சம் வாழியவே!

நலமார் அறங்கள் நலிதல் இன்றி
நாளும் நிலையில் வாழ்க்கையிலே
அலையும் அன்பர்க் கறிவை யளிக்கும்
'ஞான சுரபி' முத்தையர்
அலகில் சைவ நீதியைப் பரப்பி
ஆக்கம் காண அயராதே
உலகம் முழுதும் உலவிச் செய்யும்
உண்மைத் தொண்டு வாழியவே!

**கவிஞர் வி. கந்தவனம்**

## கனடாவிற் பெறக்கூடிய கவிஞரின் பிற நூல்கள்

1. விநாயகப்பா
2. இலக்கிய உலகம்
3. மணிக் கவிகள்
4. ஒன்று - பட்டால்
5. இயற்கைத் தமிழ்
6. எழுத்தாளன்

அச்சுப்பதிப்பு: சங்கர் அச்சகம் (416) 264-2715